
வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

ஒக்ரோபர் 29 – நவ.04 /2014

பக்கம் 24

விலை 30/-



# புலியும் எலியும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 100 கோடி நாயகி

இந்தியக் குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் வாழ்க்கை குறித்த ஹிந்தித் திரைப்படம் 100 கோடிக்கும் மேல் வசூலித்துள்ளது.

இந்திய விளையாட்டு நட்சத்திரங்களின் வாழ்க்கை குறித்துப் படம் எடுப்பது தான் தற்போதைய நாகரிகம். அண்மையில் தடகள வீரர் மில்கா சிங் குறித்த படம் வெற்றிகரமாக ஓடியது.

அடுத்து கிரிக்கெட் வீரர் டோனி, முன்னாள் ஜாம்பவான் நவாப் அலி கான் பட்டோடி குறித்தும் ஹிந்தியில் படம் எடுத்து வருகின்றனர். இதனிடையே, லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் வாழ்க்கை குறித்த, படம் சமீபத்தில் வெளியானது.

இதில், பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா, மிகவும் துணிச்சலாக நடித்திருந்தார். படம் குறித்த விமர்சனங்கள் சிறப்பாக அமைய, வெளி வந்த முதல் இரு வாரங்களில் 50 கோடி ரூபா வசூலித்து இருந்தது.

இதனிடையே, சமீபத்தில் முடிந்த ஆசிய விளையாட்டில், மேரி கோம் தங்கம் கைப்பற்றி அசத்தினார். இதையடுத்து, இந்தப்படத்துக்கு மவுசு அதிகரித்துவிட்டது.

தற்போதைய நிலையில், மேரி கோம் படம்100 கோடி வசூலை தாண்டி விட்டதாம். இதனால் உண்மையான மேரி கோம், மேரி கோமாக நடித்த பிரியங்கா சோப்ரா என, இருவரும் பெரும் உற்சாகத்தில் உள்ளனர்.

பனிச்சறுக்கின்போது விபத்துக்குள்ளான முன்னாள் ஃபோர்முலா 1 கார்ப் பந்தய வீரர் மைக்கேல் ஷூமேக்கர் முழுமையாகக் குணமடைய ஒன்று முதல் 3 ஆண்டுகள் வரை ஆகலாம் என அவருக்கு சிகிச்சை அளித்து வரும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.



படுத்த படுக்கையாக இருக்கும் ஷூமேக்கருக்கு சிகிச்சை அளித்து வரும் பிரான்ஸ் டாக்டர் ஜியான் பிரான்காய்ஸ் மேலும் கூறுகையில், "கடந்த டிசம்பரில் விபத்துக்குள்ளானதில் இருந்தே அவரை நன்றாக பார்த்துக் கொள்ளும் அவருடைய மனைவி கோரின்னாவை பாராட்டுகிறேன். ஷூமேக்கரின் உடல்நிலையைத் தொடர்ந்து கவனித்து வருகிறேன். அவர் குணமடைய நாம் காலஅவகாசம் கொடுக்க வேண்டும். அவர் குணமடைய ஒன்று முதல் 3 ஆண்டுகள் வரை ஆகலாம்" - என்றார்.

## குணமடைய 3 வருடம்

அதுவரை அனைவரும் பொறுமையாக இருப்பது அவசியம். அவர் உடல்நிலையில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பார்த்து அது தொடர்பாக அவருடைய குடும்பத்தினரிடம் தெரிவித்து வருகிறேன். அவருடைய உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் உள்ளது என்றார்.

45 வயதான ஷூமேக்கர் கடந்த டிசம்பரில் பிரான்ஸில் உள்ள ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது பனிப்பாறை யில் மோதி விபத்துக்குள்ளானர். அதில் அவருடைய தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் அவர் கோமா நிலையில் இருந்தார்.

6 மாத காலம் கோமாவில் இருந்த ஷூமேக்கர் அதிலிருந்து மீண்டுவிட்டாலும், முழுமையாகக் குணமடையவில்லை. ஸ்விட்சர்லாந்தில் உள்ள அவருடைய வீட்டில் வைத்து ஷூமேக்கருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



# கனவு காணுங்கள்

விளையாட்டில் சாதிக்க, இளம் வீரர்கள் கனவு காண வேண்டும் என பெடரர் கூறியுள்ளார்.

ரென்னிஸ் அரங்கில் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தி வருபவர் ரோஜர் பெடரர். அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீரர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர். இவர், இளம் தலைமுறையினருக்கு அறிவுரை கூறியுள்ளார்.

ஒவ்வொருவரும் விளையாட்டில் சிகரத்தை தொட, கனவு காண வேண்டும். இதை எட்டிப்பிடிக்க கடினமாக உழைப்பது அவசியம். சில நேரத்தில் நமது கனவு நனவாகவில்லை என்றால், தவறிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையெனில், சிறு மாற்றம் செய்து மீண்டும் முயற்சிக்கலாம்.

எனது சிறு வயதிலிருந்தே, பல கனவுகளைக் கண்டிருக்கிறேன். ரென்னிஸ் வீரராக வேண்டும் என விரும்பினேன். எனது சிறு வயது நாயகனாக ஜெர்மனியின் போரிஸ் பெக்கர் இருந்தார். இவரை போல ரென்னிஸ் விளையாட நினைத்தேன். விம்பிள்டன் உள்ளிட்ட 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றதை பெருமையாக கருதுகிறேன்" - இவ்வாறு பெடரர் கூறினார்.



## புதிய சாதனை

நியூசிலாந்துக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் 6 பேரை ஆட்டமிழக்கச் செய்த தென்னாபிரிக்க விக்கெட் கீப்பர் குவிண்டன் டி கொக், குறைந்த ஒருநாள் போட்டிகளில் 50 பேரை ஆட்டமிழக்கச்செய்து புதிய சர்வதேசச் சாதனையைப் படைத்துள்ளார்.

குவிண்டன் டி கொக் அவரது 27ஆவது ஒருநாள் போட்டியை நியூசிலாந்துக்கு எதிராக ஆடினார்.இதில் அவர் 5 பிடியெடுப்புக்கள் 1 ஸ்டெம்பிங் என்று அசத்தினார். இதன் மூலம் 27 போட்டிகளில் 50 பேரை ஆட்டமிழக்கச்செய்து புதிய சாதனையை அவர் படைத்தார்.

மேற்கிந்திய தீவுகளின் ரிட்லி ஜேக்கப்ஸ், இங்கிலாந்தின் ஜெரைண்ட் ஜோன்ஸ் மற்றும் ஜோஸ் பட்லர் ஆகியோர் 30 ஒருநாள் போட்டிகளில் 50 பேரை ஆட்டமிழக்கச் செய்ததே இதுவரை மிகக்குறைந்த போட்டிகளில் அதிகமானோரை ஆட்டமிழக்கச் செய்த விக்கெட் காப்பாளர் என்ற சாதனையாக இருந்தது.

தற்போது 27 ஒருநாள் போட்டிகளில் 50 பேரை டிஸ்மிஸ் செய்த வகையில் டி கொக் புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

## மீண்டும் அநீதி

தென் கொரியாவின் இன்சியான் நகரில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற இந்திய குத்துச்சண்டை வீராங்கனை சரிதா தேவி, நடுவர் பாரபட்சமாக செயற்பட்டதாகக் கூறி வெண்கலப்பதக்கத்தை உதறினார்.

அதன் எதிரொலியாக இப்போது சரிதா தேவியை மட்டுமின்றி இந்திய குத்துச்சண்டை பயிற்சியாளர்கள் குருபாக்ஸ் சிங் சாந்து, பி.ஐ.பெர்னாண்டஸ், சாகர் மல் தயால், ஆசிய விளை யாட்டுப் போட்டிக்கான இந்திய விளையாட்டுக் குழுவின் தலை வராக இருந்த சுமேரிவாலா ஆகியோருக்கும் தடை விதித்துள்ளது சர்வதேச குத்துச்சண்டைச் சங்கம்.

அடுத்த மாதம் தென் கொரியாவில் நடைபெறவுள்ள உலக குத்துச்சண்டை சம்பியன் ஷிப் போட்டியில் பங்கேற்க சரிதா தேவியை அனுமதிக்கமாட்டோம் என தெளிவாகக் கூறியிருக்கும் ஏஐபிஏ, இது தொடர்பாக அடுத்த அறிவிப்பு வரும் வரை தடை நீடிக்கும் என அறிவித்துள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டி முடிந்தவுடனேயே சரிதா தேவி தனது செயலுக்காக வருத்தம் தெரிவித்து ஆசிய ஒலிம்பிக் சபைக்கு கடிதம் எழுதிவிட்ட நிலையில், இப்போது அவர் மீது அதிரடி நடவடிக்கை பாய்ந் திருப்பது விளையாட்டு வீரர்களிடையே மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷா என். அபுஷாபன் (rashaaRasha N. AbuShaaban) இங்கிலாந்தின் Aberdeen பல்கலைக்கழக முதுநிலைப்பட்டம் பெற்றவர். பலஸ்தீன சிவில் சமூக அமைப்புக்களிலும் மனிதாபிமான மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களிலும் பணியாற்றியவர். தற்போது சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணிபுரிகின்றார். உரிமைகளை உறுதி செய்வதும், அதிகாரங்களைக் கையளிப்பதுவுமே, பெண்கள் குழந்தைகள், இளைஞர்கள் உள்ளடங்கலான அமைதிமிக்க பலஸ்தீன சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான திறவுகோல்கள் என்பது இவருடைய நம்பிக்கை. தற்பொழுது ஆக்கிரமிப்பு யுத்தம் நடைபெறும் காஸாவிலிருந்து இந்தக் குறிப்புக்களை alochonaa.com இணையத்தளத்துக்காக எழுதியுள்ளார். இவையே 'சுடர் ஒளி'யில் தொடராக விரிகின்றன.

# படுகொலை நாள்களின் குறிப்புகள்

- ரஷா என். அபுஷாபன்
- தமிழில் : சயந்தன்

காஸா, ஜூலை 10, 2014
போர்நாள்- ஏழு

இரத்தம் தோய்ந்த இன்னுமொரு நாள் கடந்து செல்கிறது. இந்த இரவின் ஆரம்பம் அமைதியாக இருந்தது. ஆம். அது புயலுக்கு முந்திய அமைதி. இங்கே அமைதியென்பது வான் தாக்குதல்கள் இல்லாத ஒரு பொழுதென்றே அர்த்தப் படுத்துகிறேன். ஆனால் அல்லும் பகலும் ஸ்ஸ்ஸ் என எங்கள் தலைக்கு மேலே அலையும் வேவு விமானங்களின் இரைச்சல் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. எங்கேயோ பூம் என்ற ஒலியோடு ரொக்கெற் வெடிக்கிறது. மிகச் சரியாக ஜெர்மனி - ஆர்ஜன்ரீனா உலகக் கோப்பைக் கால்பந்தாட்டத்தின் முடிவுக்கு அடுத்துக் கேட்டது. ஒருவேளை ஜெர்மனியின் வெற்றியை விமானி ரசிக்கவில்லையோ..? அடுத்து இன்னொரு வெடியோசை.. அதையடுத்து இன்னொன்று.. அது வீட்டிலிருந்து அருகாகவுள்ள பொலிஸ் நிலையமொன்றைத் தாக்கியது. அப்பொழுது நாங்கள் நோன்பை முடித்து உணவு எடுத்துக்கொண்டிருந்தோம். என்னுடைய நினைவெல்லாம் காஸாவின் வடக்கிலிருந்து துரத்தப்பட்டு ஐ.நா பாடசாலைகளில் தங்கியுள்ள நூற்றுக்கணக்கான சனங்களைச் சுற்றியே இருந்தது.

மொட்டை மாடியில் உட்கார்ந்து விடியும் வரை வானத்தை வெறித்துக் கொண்டிருந்தேன். மூக்கைத் துளைக்கும் நாற்றத்திலிருந்து விடுபட அயற்குடியிருப்பாளர்கள் வீதியில் குப்பைகளை எரித்துக்கொண்டிருந்தார்கள். நகராட்சி செயலிழந்து விட்டது. சூடான கோடை காலமென்பதால் குப்பைகள் நிறைந்து வழிந்து மணக்கத்தொடங்கிவிட்டன.

எனது பகுதி ஓரளவு அமைதியாயிருந்தாலும் தூரத்தே குண்டுச் சத்தங்கள் கேட்டபடிதானிருக்கிறது. வீடுகள், பள்ளி வாசல்கள், மருத்துவ நிலையங்கள் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலைத் தொடுத்துவருகின்றது. தடைசெய்யப்பட்ட பயங்கரமான 'க்ளஸ்டர்' ரகக் குண்டுகளை இஸ்ரேல் பயன்படுத்துவதாக அல் ஸிபா மருத்து வர்கள் இன்று உறுதிப்படுத்தியுள்ளார்கள். வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படும் அதிகளவான காயங்கள் சிகிச்சையளிக்க முடியாத நிலையிலிருக்கின்றன. இந்த வகைக் குண்டுகள், வெடிக்கும்போது உள்ளிருக்கும் நூற்றுக்கணக்கான சிறு குண்டுகள் வெடித்துப் பரவுகின்றன. இவை மனித உடலின் ஆழத்தில் திசுக்களையும் இரத்த நாளங்களையும் அறுத்தெறிவதால் இரத்தப்பெருக்கு உண்டாகி இறுதியில் மரணம் ஏற்படுகின்றது. இஸ்ரேல் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதையும் அறிந்திருந்தோம். கடந்த யுத்தகாலங்களிலும் பொஸ்பரஸ் குண்டுகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை நினைவுபடுத்துகிறேன். பலஸ்தீன மக்களை தம்முடைய ஆய்வுகூட எலிகளாகப் பயன்படுத்துவதற்காகவா இஸ்ரேல் அவர்களை ஆக்கிரமிப்புச் செய்கிறது..? தம்முடைய இராணுவ வளர்ச்சிக்கான பரிசோதனைக்காகவா பலஸ்தீனர்களை அவர்கள் பயன்படுத்துகிறார்கள்..? எவ்வளவு மனிதமற்ற செயலிது!?




என்னுடைய இதயத்தை அழச்செய்த இன்னொரு காணொலியை இன்று பார்த்தேன். அது மிகவும் கொடூரமானது. ஒரு பலஸ்தீனத் தந்தை இறந்துபோன தன் இரண்டு சிறு பிள்ளைகளையும் இறுக்கி அணைத்தபடி கதறு கிறான். அவர்களைக் காப்பாற்ற முடியாத கையகலாத்தனத்துக்காக அவர்களிடம் மன்னிப்புக்கேட்டு ஓலமிடுகின்றான். ஆயுதங்களற்ற வெகு சாதாரண ஒரு குடிமகன், இஸ்ரேலிய விமானங்களிடமிருந்தும் போர்க் கப்பல்களிலிருந்தும் தன் பிள்ளைகளைப் பாதுகாக்க முடியாத துயர நிலைக்காக தன் பிள்ளைகளிடம் மன்னிப்புக் கேட்டு இறைஞ்சுகிறான். எத்தனை நெஞ்சை உலுக்குகிற காட்சியிது

இது மற்றுமொரு காணொலி. ABC News தொகுப்பாளர், தன்னுடைய செய்தியளிக்கையில் ஏவுகணைகள் இஸ்ரேலுக்குள் வந்து விழுகின்றன என்கிறார். அப்பொழுது திரையில் இஸ்ரே லிய விமானங்கள் படுவேகமாக காஸாவுக்குள் பறக்கின்றன, இரண்டு பலஸ்தீன இளைஞர்கள் இடிபாடுகளுக்கிடையில் படுக்கை மெத்தைகளைத் தூக்கிச் செல்லும் ஒரு புகைப்படத்தை திரையில் காட்டி ஒரு இஸ்ரேலியக் குடும்பம், முடிந்தவரை தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்கிறார்கள், என்று அவர் விவரிக்கின்றார். பின்னர் அது தவறு என்று ABC News ஒப்புக் கொண்டது ஆனால் யோசித்துப் பார்த்தால், ஒருமுறை மிகப் பரவலாக பரப்பப்பட்ட பொய்யை எத்தனைமுறை தவறென்று ஒப்புக்கொண்டாலும் அதுவே மறுக்கமுடியாத உண்மையாக மாறிப்போகின்றது.

நான் மறுபடியும் யோசிக்கின்றேன். இந்த யுத்தத்தின் பின்னாலுள்ள உண்மையான காரணம் என்ன..? இது ஏன் இப்பொழுது நிகழ்கிறது. வெஸ்ட்பாங்கில் கொல்லப்பட்ட மூன்று இஸ்ரேலியக் குடியேறிகளுக்காகவா.. ? அல்லது ஹமாஸின் ரொக்கெற்றுக்கள் இஸ்ரேலின் உள்ளே தாக்கியதனாலா..?

**வீடுகள், பள்ளி வாசல்கள், மருத்துவ நிலையங்கள் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலைத் தொடுத்துவருகின்றது. தடைசெய்யப்பட்ட பயங்கரமான 'க்ளஸ்டர்' ரகக் குண்டுகளை இஸ்ரேல் பயன்படுத்துவதாக அல் ஸிபா மருத்து வர்கள் இன்று உறுதிப்படுத்தியுள்ளார் கள். வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படும் அதிகளவான காயங்கள் சிகிச்சையளிக்க முடியாத நிலையிலிருக் கின்றன.**

ஹமாஸ், ஜனநாயக வழிமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டதன் ஊடாக காஸாவை நிர்வகிக்கிற ஓர் அமைப்பு. நாம் விரும்புகிறோமோ இல்லையோ, இது சட்டப்படியானது. இது காஸா மக்களுடைய தெரிவு. பொதுமக்கள் மீதும் யுத்தத்தில் ஈடுபடாதவர்கள் மீதும் இஸ்ரேல் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்வது, ஹமாஸை அழிப்பதற் கானது மட்டுமல்ல. இதனை ஒரு கூட்டுத் தண்டனையாக இஸ்ரேல் கருதுகிறது.

போராளிகளையும், ஹமாஸ் உறுப்பினர் களையும், காவல்துறை அதிகாரிகளை யும், மட்டுமே தாம் தாக்குவதாக இஸ்ரேல் நியாயப்படுத்தினால்கூட அவர்களுடைய குடும்பங்களையும் அயலவர்களையும் ஏன் கொல்கிறார் கள்..? இஸ்ரேல் வான்கலங்கள், பாடசாலைகளையும், சுகாதார நிலையங் களையும், பள்ளிவாசல்களையும், நீர் வசதிகளையும், இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வு முகாம்களையும்.. சிறுவர் முன்பள்ளிகளையும் ஏன் குறிவைக் கின்றன. இந்த இடங்கள் ஆயுதங்களைச் சேமித்து வைக்கும் இடங்களா..? அதற்கு வாய்ப்புக்கள் உண்டா..? இதைக் கேட்க நாதியேயில்லை.

சட்டங்களும் இல்லை. தார்க்கங்களும் இல்லை. யுத்தம் தொடங் கிய நாள் முதலாகக் கொல்லப்பட்டவர்களிலும் காயமடைந்தவர்களிலும் 70 வீதத் துக்கும் அதிகமானவர்கள் பெண்களும் குழந்தைகளும் முதியவர்களுமே என்று மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. 90 வீதத்துக்கு அதிகமானோர் சாதாரண பொதுமக்கள்.

எங்களிடம் ஏவுகணை எதிர்ப்புப் பொறிமுறைகளோ, அல்லது வான் காப்பு ஆயுதங்களோ கிடையாது. நான் நினைக் கிறேன், உண்மையில் மிக முக்கிய மான தலைவர்களைக் கொல்வது மட்டுமே இஸ்ரேலின் நோக்கமாயிருந் தால் ஏன் அவர்களைக் குறி வைக்க முடியவில்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரதி ஆனந்த்

# உலகுக்கு பாடம் சொன்ன நைஜீரியா

**எபோலாவால் பாதிக் கப் பட்ட லைபீரிய நாட்டைச் சேர்ந்தவருடன் நெருக் கமாக இருந்த நபர் ஒரு வர் போர் ஹற் கோட்டில் உள்ள ஒரு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்ற போதே, நைஜீரியாவில் நோய்த் தொற்று தீவிர மடைந்தது. அந்த நப ருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சில நாள் களில் இறந் தார்.**

ஜூலை 2014, நைஜீரிய நாட்டின் லாகோஸ் விமான நிலையத்துக்கு ஒரு அழையா விருந்தாளி வந்திறங்கினார். மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியாவில் நோய் வாய்ப்பட்டிருந்த தனது சகோதரியைப் பேணி வந்த அந்த நபரும் திடீரென நோய் வாய்ப்பட்டார். அவரைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்க முற்பட்டது மருத்துவமனை. ஆனால், சிகிச்சைக்கு உட்படாமல் அந்த நபர் விமானம் ஏறி நைஜீரியா வந்தடைந்தார். அவர் மட்டும் வரவில்லை. எபோலா நோய்க்கிருமியையும் கொண்டு வந்தார். ஆபிரிக்காவின் மிகப்பெரிய நகரான லாகோஸ், கடல், வான், தரை வழிப் போக்குவரத்தின் முக்கிய புள்ளியாக உள்ளது. அங்கு சேரிப் பகுதிகளும் அதிகம்.
அதிகளவான மக்கள்தொகை, சேரிச்சூழல் இரண்டுமே அங்கு நோய்க்கிருமி வெகு விரைவாக பரவ ஏதுவாக இருந்தன. நைஜீரியாவில் எபோலா பரவியது குறித்த செய்தியை வெளியிட்ட வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்று, அதிக மக்கள்தொகையும், நெரிசல்மிகு உட்கட்டமைப்பும் நோய் பரவுவதற்கும், நோய்க்கிருமி நீண்ட காலம் உலா வருவதற்கும் சாதகமாக இருந்தன என குறிப்பிட்டிருந்தது கவனிக்கத்தக்கது.
எபோலாவால் பாதிக்கப்பட்ட லைபீரிய நாட்டைச் சேர்ந்தவருடன் நெருக்கமாக இருந்த நபர் ஒருவர் போர் ஹற்கோட்டில் உள்ள ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோதே, நைஜீரியாவில் நோய்த்தொற்று தீவிரமடைந்தது. அந்த நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சில நாள்களில் இறந்தார். நோய் தொற்று ஏற்பட்டதை அறியாத அவர் வழக்கம்போல் அது தீவிரமடைந்து, அவரை படுக்கையில் தள்ளும்வரை தன்னிடம் வந்தவர்களுக்கு சிகிச்சை அளித்தார். பாதிக்கப்பட்ட அவரிடம் சிகிச்சை பெற்ற பலருக்கும் எபோலா தொற்று ஏற்பட்டது. இவ்வாறே, நைஜீரியாவில் எபோலா வேகமாக பரவியது.
ஆனால் அதைவிட வேகமாக இயங்கிய நைஜீரிய அரசு எபோலா வைரஸை அந்நாட்டில் இருந்து ஒழித்துக்கட்டியுள்ளது. ஆம், ஒக்ரோபர் 20 இல் உலக சுகாதார மையம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில், நைஜீரியாவில் எபோலா அச்சுறுத்தல் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
நைஜீரியாவின் துரித செயற்பாடு, எபோலா அச்சுறுத்தலில் இருந்து தப்ப முடியாமல் தவிக்கும் கினியா, லைபீரியா, சியாரா லியோன் போன்ற மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு ஒரு அருமருந்தாக அமையும்.
ஆபிரிக்காவின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடுதான் நைஜீரியா. எங்கிருந்தோ வரும் பயணியால் பரப்பப்படும் நோயைக்கூட நைஜீரியா போன்ற வளரும் நாடுகள், தாங்கள் எடுக்கும் துரித, வலுவான நடவடிக்கைகளால் கட்டுப்படுத்த முடியும் என்பது இதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.
எபோலாவைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்டவர்களை துரிதமாகக் கண்டறிந்து, அவர்களைத் தனிமைப்படுத்தி, சிகிச்சைக்கு உட்படுத்துவதோடு, அவர்களுக்கு நெருக்கமானவர்களை கண்காணிப்பதிலேயே இருக்கிறது. இதற்கு முந்தைய காலங்களில் எபோலா தொற்று ஏற்பட்டபோதும் இத்தகைய நடவடிக்கைகள் மூலமே அந்தக் கொடிய வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.
இந்த நடைமுறையை சிறிய தவறுகூட இல்லாமல் பின்பற்றியது நைஜீரியா. அந்நாட்டில் போலியோ ஒழிப்புத் திட்டத்தில் பணியாற்றிய தேர்ந்த மருத்துவ குழுக்களை இதற்குப் பயன்படுத்தியதோடு, உயர் தொழில்நுட்பத்தையும் உபயோகித்தது. இவற்றையெல்லாம் சிறந்த முறையில் மேலாண்மை செய்யவும் ஒரு குழு அமைக்கப்பட்டது. விளைவு 900 பேரை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தி தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தியது நைஜீரிய அரசு. அவர்களில் 19 பேருக்கு எபோலா தொற்று உறுதி செய்யப்பட்டது.
இந்த 19 பேரில் பலர், நோய்க்கிருமியைக் கொண்டுவந்த லைபீரியருக்கு சிகிச்சை அளித்தவர்களாவர். இவர்களில் 7 பேர் நோய்க்கு பலியாகினர். நைஜீரியாவின், எபோலா இறப்பு விகிதம் 40% இது மற்ற மேற்கு ஆபிரிக்க நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவு.
நைஜீரியாவின் சாதனையில் இருந்து உலக நாடுகள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதவிகளுக்குப் பலியாகுதல்

- ஆசாத்

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த இலங்கைத் தோட்டத்தொழிலாளர் காங்கிரஸின் பரம்பரைத் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது முழு ஆதரவையும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். அதற்கு முன்பு இடம்பெற்ற ஊவா மாகாணசபைத் தேர்தலில் இ.தொ.க தனது சேவல் சின்னத்தை கைவிட்டு வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டது. இந்தத் தேர்தலில் மூன்று ஆசனங்களையும் அது கைப்பற்றியது. இதன் மூலம் இ.தொ.க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மலையக மக்களின் வாக்குகளால் பலப்படுத்தியது. இ.தொ.க. வைப் போன்று இன்னொரு மலையகக் கட்சியான மலையக மக்கள் முன்னணியின் ராதாகிருஷ்ணனும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவையே ஆதரிக்கப்போவதாக வாக்களித்துள்ளார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திகாம்பரமும் வெகுவிரைவில் இப்படியான ஒரு அறிவிப்பைவிடக்கூடும். அவர் அறிவித்தாலும் அறிவிக்கா விட்டாலும் அவரின் ஆதரவு மஹிந்தவுக்கே என்பது வெளிப்படை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய மூன்று அமைப்புக்களும் பெரும்பான்மையான மலையக மக்களை அங்கத்தவர்களாகக் கொண்ட தொழிற்சங்கங்களாகும். இந்த மூன்று அமைப்புக்களும் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கின்றன. எனவே பெரும்பான்மையான மலையக மக்களின் ஆதரவு மஹிந்தவுக்கே கிடைக்கும் என்று கருத முடியும்.

ஆனால் ஊவா மாகாண சபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்ட மூன்று மலையக வேட்பாளர்களும், ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட ஒரு மலையக வேட்பாளரும் வெற்றி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதிலும் மிகப் பெரும் தொழிற்சங்கமான தொழிலாளர் காங்கிரஸின் முக்கிய பிரமுகரான செந்தில் தொண்டமான் பெற்ற வாக்குகளின் அளவுக்கு ஐ.தே.க வேட்பாளரும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது பாரம்பரியத் தலைமைகளுக்கு அப்பால் மலையகத்தில் ஒரு புதிய தலைமை உருவாகுவதையே இந்தச் சம்பவம் வெளிப்படுத்துகிறது.

இன்று இலங்கையில் படுமோசமான பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்பட்ட வசதியீனமான வாழ்க்கை வாழ்பவர்கள் மலையக மக்கள் தான். மிகக் குறைந்த கூலியில் இவர்கள் கடுமையான வேலை வாங்கப்படுகின்றனர். இன்னும் அவர்கள் 'லயன் காம்பராக்கள்' என அழைக்கப்படும் புறாக்கூடுகள் போன்ற தொடர் வீடுகளிலேயே குடியிருந்து வருகின்றனர். போக்குவரத்து வசதிகள் இன்மையாலும் இவர்கள் படு மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றவர்கள் பலர் அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர். ஒரு அமைச்சர் நான்கு பிரதியமைச்சர்களும் இவர்களுக்கு உண்டு. இதைவிட ஜனாதிபதியின் ஆலோசகர்கள், கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மலையகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் தான்.

பெருந்தோட்டத் துறை அமைச்சராக மஹிந்த சமரசிவாவே பதவி வகிக்கின்றார். அவர் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமைகளைப் புரிந்து கொண்டவரல்ல. எந்த ஒரு மலையகத் தலைவராலும் பெருந்தோட்ட அமைச்சுப் பதவியை வாதாடிப் பெறத் திராணியில்லை. இந்த அமைச்சுப் பதவியைப் பெற்று தோட்ட மக்களின் நலன்களை மேம்படுத்துவதில் அக்கறை கொண்டவர்களாகவும் மலையகத் தலைவர்கள் எவரும் இப்போதில்லை.

எட்டு இலட்சம் வாக்குப் பலம் மலையக மக்களிடம் உண்டு என்ற வகையில் தமது துறைசார்ந்த அமைச்சைக் கோரிப் பெறும் வலிமை இருந்தும் எவரும் அப்படியான முயற்சிகளில் ஈடுபடவில்லை.

ஆறுமுகம் தொண்டமானோ கால்நடை அபிவிருத்தி அமைச்சுப் பதவியுடன் திருப்தியடைந்து விட்டார். முத்து சிவலிங்கம் பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்று அரசின் அடாவடித்தனங்களை நியாயப்படுத்தி கருத்து வெளியிட்டு வருகிறார். திகாம்பரம் தேசிய இனங்கள் மொழிகள் நல்லிணக்க பிரதி அமைச்சராக மலையக மக்களுக்கு என்ன செய்யப் போகிறார் எனத் தெரியவில்லை. இராதாகிருஷ்ணனோ தாவரவியல் பூங்கா, பொழுதுபோக்கு அமைச்சராகப் பொழுது போக்கி வருகிறார்.

இப்படியாக மலையகத் தலைவர்கள் அனைவருமே மலையக மக்களுக்கு பயனுள்ள சேவைகள் எதையுமே செய்ய முடியாத அமைச்சுக்களையும் பிரதி அமைச்சுகளையுமே பொறுப்பேற்றுள்ளனர்.

ஒரே வார்த்தையில் சொன்னால் அவர்களுக்கு பதவிகள் கிடைத்து விட்டன. ஆனால் மலையக மக்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. பிரிட்டன் காலனித்துவ ஆட்சியில் வாழ்ந்த அதே அவல நிலை தான் இன்று வரை அவர்களுக்குத் தொடர்கிறது.

தாங்கள் பெற்ற அமைச்சுப் பதவிகளுக்கு நன்றிக் கடனாக மலையகத் தலைவர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கவுள்ளார். ஆனால் இந்த ஆதரவை இவர்கள் எந்த வித பயனையும் பெறாத மலையக மக்களின் வாக்குகளாலேயே வழங்கப்போகின்றனர்.

மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்க முடியாத அமைச்சுக்களையும் பிரதி அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக் கொண்டு மலையக மக்களின் வாக்குகளை ஜனாதிபதிக்கு கொட்டிக் கொடுக்க இவர்கள் முன்னின்று செயற்படுகின்றனர். பதவிகளுக்காக மலையக மக்களையும், அவர்களின் நலன்களையும் ஒடுக்கு முறையாளர்களுக்கு விற்கிறார்கள் என இந்தத் தலைவர்களை நோக்கிச் சிலர் குற்றம் சாட்டுவதில், தவறு இருக்க முடியும்?

மலையக மக்களின் கட்சிகள் ஒரே அணியில் இணைந்து அரசுடனோ அல்லது எதிர்க்கட்சியினருடனோ தமது பலத்தின் அடிப்படையில் பேசி, சில உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் அவர்கள் அதற்குத் தயாரில்லை.

தமது கட்சிகளின் பேரால் மலையக மக்களை ஒருவரோடு ஒருவர் மோதவிடுவதில் தான் அக்கறை காட்டுகின்றனர். ஆறுமுகம் தொண்டமானின் ஆதரவாளர்களும் திகாம்பரத்தின் ஆதரவாளர்களுக்குமிடையே உண்மையில் பெரும் மோதல் நடந்ததை நாம் அறிவோம். அதே போன்று ஆறுமுகம் தொண்டமானின் ஆதாரவாளர்கள் இராதாகிருஷ்ணனின் செயலாளரைத் தாக்கியமை பற்றியும் செய்திகள் வெளிவந்திருந்தன.

இப்படியாக மலையக மக்களை ஒன்று திரள விடாது அவர்களிடையே மோதல்களை உருவாக்கும் இந்தத் தலைமைகள் அரசாங்கத்தை ஆதரிப்பதில் மட்டும் ஒருமைப்பட்டு நிற்கின்றனர்.

பதவிகளுக்காக மலையக மக்களைப் பலி கொடுக்கும் தலைமைகளை மக்கள் இனம் காணும் நாள் வெகுவிரைவில் இல்லை. இதற்கான அறிகுறியே ஊவாத் தேர்தலில் எவரும் எதிர்பார்க்காத வகையில் ஐ.தே.க வேட்பாளர் பெற்ற வெற்றி. இந்த வெற்றி சுயநல அரசியலுக்கு மலையகத்தில் அடிக்கப்பட்ட முதல் சாவு மணி.



## உணர்வின் ஊற்று - 19

வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்பு பவர்களா? அப்படியாயின் உங்களுடைய கவி யாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகியிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும் போது உங்கள் மனதில் எழும் உணர்வுகளை 10 வரிக்குள் கவிதையாக்கி அனுப்புங்கள்.

**அனுப்பவேண்டிய முடிவுத் திகதி : 10.11.2014** தரமானவை பிரசுரிக்கப்படும்.

முகவரி: **உணர்வின் ஊற்று - 19**
**சுடர் ஒளி** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலியாகும் அரசு

சு.கோமேஸ்

அண்மைக் காலமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் பற்றி ஆட்சியிலுள்ளவர்களினாலும், சிங்கள ஊடகங்களினாலும் அதிகமாக பேசப்படுகின்றது. இப்படி திடீரெனப் புலிகள் பற்றிய செய்திகள் உயிர் பெற்றுவிட்டால் இலங்கை தீவில் தேர்தல் ஒன்று நெருங்குகிறது என்று தான் அர்த்தம்.

இராணுவத்தினருடனான இறுதி யுத்தத்தின் பின்னர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருந்தனர். இவர்களில் உயர்மட்ட உறுப்பினர்கள் சிலரும் உள்ளடங்குகின்றனர். இந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் பற்றி சர்வதேச தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் ஊடகம் ஒன்றில் தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

சிறு சிறு குழுக்களாக புலிகள் மீண்டும் நாடுதிரும்பும் சாத்தியம் காணப்படுவதாக புலனாய்வுப் பிரிவினரும் எச்சரித்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே புலிகள் மீண்டும் நாடு திரும்ப முயற்சிப்பதாக தெரிய வந்துள்ளது என இலங்கைப் புலனாய்வுத் துறையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்தச் செய்தியைக் கேட்கும்போது எழுகின்ற சந்தேகம் என்னவென்றால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவா புலிகள் இலங்கைக்கு வருகின்றனர்? என்பதுதான்.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இன்னொரு தேர்தல் பரப்புரை என்று கூடச் சொல்ல முடியும் இல்லாத ஒன்றை இருக்கு இருக்கு என்று அடிக்கடி கூறினால் அது உண்மைதானோ என மக்கள் நம்பிவிடுவார்கள். இதனை மஹிந்த ராஜபக்ஷ சரியாகவே விளங்கி வைத்துள்ளார் போல,

தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையில் இருந்து அழிக்கப்பட்டு விட்டதாக அரசு கூறுகிறது. ஆனாலும் புலிகள் ஏற்படுத்திச் சென்ற சுவடுகளை, நினைவுகளை ஆட்சியிலுள்ளவர்களும் சிங்கள மக்களும் மறக்கவில்லை. இதற்குச் சிறந்த உதாரணம் அண்மையில் நடந்து முடிந்த ஊவா மாகாணசபை தேர்தல். இந்தத் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தலைமையிலான அணியினர் ஒரு வினோதமான பரப்புரைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் 2006 ஆம் ஆண்டு இராணுவத் தளபதியாக இருந்த பொன்சேகா மீது தற்கொலை தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதன் போது தாக்குதலுக்கு உள்ளான பொன்சேகாவின் காரை மக்களுக்கு காட்டி வாக்கு கேட்டனர். ஆனால் அது பெரிதாக எடுபடவில்லை.

புலிகளை அழித்து இலங்கைக்கு ஜனாதிபதிகளில் எவரும் செய்ய முடியாத ஒரு சாதனையினை மஹிந்த ராஜபக்ஷ செய்து முடித்துள்ளதாகவே சிங்கள மக்கள் கருதுகின்றனர். இதன் காரணமாகவே சரத் பொன்சேகா என்ற பெயர் மஹிந்தவுக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

போருக்குப் பின்னர் எத்தனையே தேர்தல்கள் இடம்பெற்று விட்டன. ஆனால் வடக்கு மாகாணசபைத் தேர்தலைத் தவிர வேறெந்த தேர்தலிலும் மஹிந்த தலைமையிலான அரசை எவராலும் வீழ்த்த முடியவில்லை. அந்த அளவுக்கு மஹிந்தவின் செல்வாக்கு உயர்புள்ளியில் இருப்பதற்கு புலிகளை வென்றுகாட்டியவர் என்ற ஒற்றைச் சாதனை மட்டுமே காரணம்.

அதற்கு வலுச் சேர்ப்பதைப் போலவே மஹிந்த கூட்டணியின் பரப்புரைப் போர்களும் அமைந்துள்ளன. விடுதலைப் புலிகளை அழித்து நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்வது தம்மால் தான் என்ற வீர வசனங்களை மஹிந்த கூட்டணி அள்ளி வீச , சிங்கள மக்களும் அதனை நம்பி வாக்களிக்கின்றார்கள்.

இங்கு தான் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்தப் பரப்புரை மேடைகளில் அதிகமாகப் பேசப்படும் சொல் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற ஒன்று மட்டுமே. உண்மையில் விடுதலைப் புலிகளை வைத்து தான் இலங்கையில் அரசியல் காய் நகர்த்தல்கள் இடம்பெற்று வருகின்றன. புலிகள் அழிந்த பின்னரும் இன்னும் புலிவாலை அரசு பிடித்துக் கொண்டிருப்பதற்கு இதுதான் காரணம்.

தனியே தென்னிலங்கை அரசியல்வாதிகள் மட்டும் தான் புலிச்சவாரி செய்கிறார்கள் என்றில்லை. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளும், விடுதலைப் புலிகள் என்ற ஒரு அமைப்பையே துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வாக்குவேட்டையில் இறங்குகிறார்கள்.

> **தனியே தென்னிலங்கை அரசியல்வாதிகள் மட்டும் தான் புலிச்சவாரி செய்கிறார்கள் என்றில்லை. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளும், விடுதலைப் புலிகள் என்ற ஒரு அமைப்பையே துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வாக்குவேட்டையில் இறங்குகிறார்கள்.**

சர்வதேசம் இலங்கையில் நிலவும் மனித உரிமைப் பிரச்சினையினை கையில் எடுக்கும் போதெல்லாம், சர்வதேசத்தில் இயங்கிவரும் புலம் பெயர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் இலங்கைக்கு ஆபத்து என்ற மாயையினைக் காட்டி தப்பிப்பது இலங்கை அரசின் வாடிக்கை.

அதுமட்டுமின்றி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளுக்கும் புலி முத்திரை குத்தி, அவை மீண்டும் விடுதலைப் புலிகளை உருவாக்கமுயல்கின்றன என்று சிங்கள மக்கள் மத்தியில் இன்னொரு பரப்புரையினையும் இலங்கை அரசு மேற்கொள்கின்றது. ஆக மொத்தத்தில் விடுதலைப்புலிகளே இலங்கையின் அரசியல் வரலாற்றை அன்றும் தீர்மானித்தார்கள்; இன்றும் தீர்மானிக்கின்றார்கள்.

உதாரணமாக இன்று ரணில் விக்கிரமசிங்க வீற்றிருக்க வேண்டிய ஜனாதிபதி ஆசனத்தில் மஹிந்த இருக்கின்றார் என்றால் அதற்கும் விடுதலைப் புலிகளே காரணம். அதேபோன்று வட கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு எதனையும் செய்யாது போனாலும் தேர்தல் காலங்களில் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கின்றார்கள் என்றால் அதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம்.

விடுதலைப் புலிகளின் பெயரை தமிழ் மக்கள் உச்சரிக்க பயப்படுகிற வேளையில் ஆட்சிக்கு வருகின்ற கூட்டணிகளுக்கு அதுவே தாரக மந்திரமாக மாறிவிட்டது.

அதற்காகத் தான் நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தலில் தம்பக்கம் வெற்றியை [illegible] கொள்ள மஹிந்த அரசு தற்போது புலி [illegible] பரப்புரையில் புலியாக மாறியுள்ளது.

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

## உரிமையா? வாலாட்டுதலா?

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத்திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்துவிட்டார். கடந்த காலங்களில் எல்லாம் பிச்சைக்காரனின் பாத்திரம்போல எதுவுமே இல்லாதிருந்த வரவு - செலவுத் திட்டங்களே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஏற்கனவே இருந்த மக்கள் நலன்சார்திட்டங்களுக்கு புதுச்சாயம் பூசி புதுப்பெயர்கொடுத்து மக்களுக்கு அரசு மானியங்களை அள்ளிவழங்குவதுபோல அவை இருந்தன.

உண்மையில் ஒன்றுமே இல்லாத வெற்றுப்பெட்டியைக் காட்டியே அரசாங்கம் மக்களை ஏமாற்றிவந்தது. இதனால் ஒவ்வொமுறையும் வரவு செலவுத்திட்டங்கள் தாக்கல் செய்யப்படும்போது அவற்றில் உள்ள ஏமாற்று வித்தையை எதிர்க்கட்சிகள் அக்குவேறு ஆணிவேறாகக் கண்டுபிடித்து அரசை வாங்கு வாங்கென்று வாங்குவது வழமை.

ஆனால் இந்தமுறை எவருமே எதிர்பாராதவகையில் பணத்தை பொதுமக்களுக்கு வாரி இறைக்கும் சலுகைகளை வரவு - செலவுத்திட்டம் சுமந்துள்ளது. அதேவேளை பாதுகாப்புச் செலவீனமும் குறைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் தனிநபர் ஒருவரின் தலாவருமானம் ஆயிரம் டொலராக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் மக்களோடு கஞ்சல்தனமாக நடந்துகொண்ட அரசு; இந்தமுறை மட்டுமே ஏன் வள்ளல்தனமாக மாறியது என்று மக்களுக்குத் தெரியும்.

அடுத்த வருடம் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலே மஹிந்த ராஜபக்ஷவை திடீர்வள்ளலாக மாற்றியுள்ளது.

மூன்றாவது முறையும் அரியணையை அலங்கரிக்கும் கனவில் மஹிந்த ராஜபக்ஷ இருக்கிறார். அதனால்தான் அரசமைப்புச் சட்டத்தை தனக்குச் சாதகமாக மாற்றி எழுதியுமிருக்கிறார். ஆனாலும் அந்த அரசியல் சாசன வளைப்பு மஹிந்தவுக்குப் பொருந்தாது என்றும் அவர் மூன்றாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் இலங்கையின் சட்டவாளர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்கள். இது மூன்றாம் முறையும் முடிசூடும் கனவில் இருந்த மஹிந்தவுக்கு பேரிடியாக அமைந்துவிட்டது. எனவே இது தொடர்பில் மேலதிக விளக்கத்தைப் பெற மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தை நாடப்போகிறார் என்று தெரியவருகிறது.

இது ஒருபுறம் இருக்க அதிகாரத் துஷ்பிரயோகம், சகோதரச்சண்டை, போர்வெற்றிப்போதையில் இருந்து மக்கள் மீண்டமை, அத்தியாவசியப் பொருள்களின் தாறுமாறான உயர்வு, பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சரிவு என்று பல்வேறு காரணங்களால் அரசினதும், மஹிந்த ராஜபக்ஷவினதும் செல்வாக்கு அதலபாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

எனவே இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் சிலவேளைகளில் முடிவு பாதகமாகவும் அமைந்துவிடக்கூடும் என்று அரச தரப்பினர் எண்ணுகின்றனர். எனவேதான் மீண்டும் மக்களை வசியப்படுத்த வரவு - செலவுத்திட்டத்தில் அளவுக்கதிகமான சலுகைகள் மக்களை நோக்கி எறியப்பட்டுள்ளன. ஆனாலும் இது தேர்தல்காலத்துக்காக எறியப்பட்ட எலும்புத் துண்டுகள் என்பதை மக்களும் நன்கு புரிந்தே கொண்டுள்ளார்கள்.

எனவே ஊவாத் தேர்தலில் நடந்ததைப் போன்று ஜனாதிபதித் தேர்தலிலும் சறுக்கலை மஹிந்த எதிர்கொள்ள நேரிடலாம். என்றாலும் தமிழ் மக்களைப்போல தருவதையெல்லாம் வாங்கிவிட்டு தேர்தல்காலங்களில் தமது உரிமையை வாக்குகளில் காட்டும் வல்லமை சிங்கள மக்களுக்கும் உண்டா என்பது தெரியவில்லை. எதற்கு அவசரம்? ஜனாதித் தேர்தலில் சிங்களமக்கள் முதுகெலும்புள்ளவர்களா? அல்லது சலுகைகளுக்காக வாலாட்டுபவர்களா என்ற உண்மை தெரிந்துவிடும்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-ஊழியான்

# வீட்டில புலி: வெளியில எலி

அரசியலில் இது எல்லாம் சாதாரணமப்பா இது பொதுவாக அரசியல்வாதிகள் பற்றிக் கூறப்படும் நகைச்சுவைச் சொற்றொடர். இது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கும் நன்கு பொருத்தம்.

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட 2015ம் ஆண்டுக் கான வரவு செல வுத் திட்டத்தில் பலருக்கும் பல அதிர்ச்சி காத்திருந்தன. யாரும் எதிர்பார்க்காத சலுகைகள் சிலவற்றை மஹிந்த தனது வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்தார். அது நாட்டிலுள்ள அனைவருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றி தனது தமிழினப்பற்றை பகிரங்கப்படுத்தியுள்ளது. கூடவே மஹிந்த ராஜபக்ஷவுடன் மிகவும் நெருக்கமாக நின்று கொண்டு கதைப்பது போலவும் படங்களையும் கூட்டமைப்பினர் எடுத்தனர். இந்தப்படங்கள் ஊடகங்களில் வெளியாகி சக்கை போடு போடுகின்றன, கத்தி திரைப்படத்தைப் போல.**

இன்னொரு அதிர்ச்சியை தமிழ் மக்களின் அரசியல் இருப்புக்காக போராடிக் கொண்டிருக் கின்றோம் என்று அடிக்கடி கூறும் தேசியக் கூட்டமைப்பு கொடுத்துள்ளது.

வரவு- செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட் டதன் பின்னர் வழமையாக தேநீர் விருந்துபசாரமொன்றை ஜனாதி பதி வழங்குவது வழமையாகும்.


இந்த தேநீர் விருந்துபசாரத்தில் விரும்பிய கட்சிகள் பங்கு பற்றலாம், பற்றாமலும் விடலாம். அது அந்த கட்சிகள் எடுக்கும் முடிவு. ஆனால் அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி மற்றும் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் பங்கேற்கவில்லை. காரணம் மஹிந்த வழங்கும் இந்த விருந்தில் ஏன் நாங்கள் பங்கு மற்ற வேண்டும் என்று எண்ணியிருக்கலாம் .அதனால் அவர்கள் தவிர்த்திருக்கலாம்

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றி தனது தமிழினப்பற்றை பகிரங்கப்படுத்தி யுள்ளது. கூடவே மஹிந்த ராஜ பக்ஷவுடன் மிகவும் நெருக்கமாக நின்று கொண்டு கதைப்பது போலவும் படங்களையும் கூட்டமைப்பினர் எடுத்தனர். இந்தப்படங்கள் ஊடகங்களில் வெளியாகி சக்கை போடு போடுகின்றன, கத்தி திரைப்படத்தைப் போல.

நாடாளுமன்றத்தில் மஹிந்தவு டன் இணைந்து கூட்டமைப்பினர் தேநீர் குடிக்கலாம் என்றால் ஏன் அண்மையில் வடக்கு மாகாணத் துக்கு இதே மஹிந்த பயணம் செய்த போது கூட்டமைப்பினர் ஜனாதிபதியின் கண்ணில் முழிக்காமல் புறக்கணித்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

கூட்டமைப்பின் இந்த முரண்பாடான நடவடிக்கைகள் வடக்கில் நாங்கள் புலிகள். தெற்கில் நாங்கள் எலிகள் என்று கூறுவது போல இருக்கின்றன.

போர் முடிவடைந்து ஐந்து வருடங்கள் கடந்து சென்ற போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது தமிழ்



மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்னும் குறையவில்லை என்பதை வடமாகணசபை தேர்தல் வெளிப்படுத்தியிருந்தது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு வெற்றி கிடைக்குமா என்ற சந்தே கத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு இன்பஅதிர்ச்சி கொடுத்த மக்கள், எதிர் பாராத வெற்றி மழையில் நனைத்து திக்குமுக்காடச் செய்தனர். ஆனால் இந்த வெற்றி மழை இனிவரும் காலங்களில் கூட்டமைப்புக்கு தொடருமா என்பது சந்தேகம் தான்.

முஸ்லிம் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறித் திரிந்த முஸ்லிம் காங்கிரசுக்கு ஊவா மாகாணசபை தேர்தல் நல்ல பதிலடி கொடுத்தது. அதைப் போல இங்கும் நடக்க நெடுங்காலம் எடுக்காது.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தி லிருந்து விலகி, தங்களுடைய சுயநல அரசியலுக்குள் நுழைய தொடங்கி விட்டார்கள் என்றே மக்கள் கருதுகிறார்கள்.

தமிழர் பிரதேசங்களில் நிலவும் இராணுவ கெடுபிடிகள், நில அபகரிப்புக்களுக்கு எதிராக ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களே குரல் கொடுப்பதுடன் போராட் டத்திலும் இணைந்து கொள்கின்றனர். கூட்டமைப்பினர் சிலருக்கு நாட்டில் என்ன நடக்கின்றது என்று கூடத் தெரியாமல் வெளிநாடுகளிலேயே பாதிக் காலம் கழிகின்றது.

உண்மையில் இறுதிக் கட்ட யுத்தத்தில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த மக்கள் தற்போதும் நடைப்பிணமாகத் திரிந்து கொண்டு தான் இருக்கின்றார்கள். அவர்களுக்காக குரல் கொடுக்க யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை. அதுமட்டுமின்றி யுத்தத்தினால் கணவனை இழந்து தமது வாழ்வாதாரத்தினை தொலைத்த 80 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்களின் நிலைமையை மேம்படுத்த என்ன வகையான உதவிகளை வழங்கலாம் என்ற திட்டம் கூட இல்லாமல் வடக்கு மாகாணசபை தனது ஒருவருட காலத்தினை நிறைவு செய்துள்ளது.

ஏன் மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று மாகாண சபைப் பிரதிநிதிகளைக் கேட்டால் ஆளுநர் விடுகின்றார் இல்லை என்று பாடாமாக்கி வைத்திருக்கும் வசனத்தை உடனே ஒப்புவிக்கிறார்கள்.எங்கட புளியும் ஒருநாளைக்கு பூக்கும். அப்ப பாத்துக்கலாம் என்பதே இவர்களின் சாட்டுகளைக் கேட்கும் போது நினைவுக்கு வருகின்றது.

மாகாணசபையை ஒதுக்குகிறார் என்ற காரணத்தை முன்வைத்தே ஜனாதிபதியின் யாழ். வருகையைக் கூட்டமைப்பு புறக்கணித்திருந்தது. ஆனால் நாடாளுமன்றில் கட்டிப்பிடிக்காத குறையாக மஹிந்தவுடன் தேநீர் குடித்து , கேக் சாப்பிட்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அப்படியானால் இப்போது மாகாணசபையை ஜனாதிபதி ஒதுக்காமல், அப்படியே வாரியணைத்து தன் இடுப்பில் சுமக்கத் தொடங்கிவிட்டாரா என்ற கேள்வி அப்பாவித் தமிழ்மக்களுக்கு எழுகின்றது. அவர்கள் அப்பாவிகள் என்பதால் கேள்விகள் கேட்பதுடனேயே தங்கள் சிந்தனைகளை அறுக்க வேண்டும். விடைகளை எதிர்பார்க்கக் கூடாது.

**முஸ்லிம் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறித் திரிந்த முஸ்லிம் காங்கிரசுக்கு ஊவா மாகாணசபை தேர்தல் நல்ல பதிலடி கொடுத்தது. அதைப் போல இங்கும் நடக்க நெடுங்காலம் எடுக்காது.**

**உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திலிருந்து விலகி, தங்களுடைய சுயநல அரசியலுக்குள் நுழைய தொடங்கி விட்டார்கள் என்றே மக்கள் கருதுகிறார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காதலுக்கு எதிரி பயம்

**கேள்வி; – காதலில் நெருக்கம், ஆழம், வீச்சு எல்லாமே அதிகம். ஆனால் பரஸ்பர மரியாதையும், மதித்தலும் குறைவு. தனித்துவம் குறித்த அங்கீகாரம் மறுக்கப்படுகிறது. சொந்தம் கொண்டாடுதல் அதிகரிக்கிறது. நெருக்கம் அதிகமானால் இவையிரண்டும் ஏன் குறைய வேண்டும்?**

பதில்; –பயம் தான் காரணம்.


மண வாழ்க்கையில் நெருக்கம் இன்னும் அதிகரிக் கிறது. தனித்துவத்துக்கு ஏறக்குறைய இடமே இல்லாமல் போகிறது. கணவனும், மனைவியும் ஒருவருக் கொருவர் சொந்தமான பொருளாகிவிடுகிறார்கள். விதிகள் பெருமளவுக்கு உறவை ஆள்கின்றன. இது செய்யலாம்; இது செய்யக் கூடாது. அதற்கு அனுமதி உண்டு; இதற்குக் கிடையாது. பயத்தின் அளவும் மாறுபடுகிறது. நட்பில் பயத்தின் பங்கு மிகக் குறைவு. காதலில் அது அதிகரிக்கிறது. மண வாழ்க்கையில் பெரும்பாலும் பயமே உறவின் அடிப்படையாக இருக்கிறது. பயம் இருக்கும் அளவுக்கு உண்மையான நெருக்கம் இல்லாமல் போகிறது.

உறவின் வெளியைக் காதல் ஏன் குறுக்க வேண்டும்? மண உறவு ஏன் பயத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்? காதல், மண உறவு இரண்டிலும் வரையறைகள் அதிகம். அதனால் தனித்துவம் வாய்ந்த ஒரு ஆணும் பெண்ணும் காதலன்–காதலி, கணவன்–மனைவி என்ற உறவு எல்லைக்குள் மாட்டிக்கொண்டு தனித்துவத்தை இழக்கிறார்கள். இந்த உறவுகள் பற்றிய மறு பரிசீலனை மிகவும் அவசியம்.




## என் காதலிக்கு.......!

- முருகன் கோவிலுக்கு போகாதே பெண்ணே ! மூன்றாவது மனைவியாக்கிவிடுவான் உன்னைக் கண்டால்...
- கோயிலில் உனக்காக அர்ச்சனை செய்யும்போது, அவள் நட்சத்திரம் என்ன?என்று கேட்டார்கள். அவளே நட்சத்திரம் என்றேன்..
- நீ என்னை மறந்து விட்டாய் என்பது எனக்கு தெரியும் , பாவம் என் இதயத்துக்கு தெரியாது அது உனக்காக இன்னும் துடித்து கொண்டு இருக்கிறது என்று.
- நீ பிறந்தநாள் வாழ்த்து கூறிய ஒரு காரணமே போதுமானது, நான் பிறந்ததற்காகப் பெருமை கொள்வதற்கு....
- இதயத்தில் ஓட்டை என்று மருத்துவர் சொன்னார்,பாவம் அவருக்கு எப்படி தெரியும் அது நீ நுழைந்த வாசல் என்று...
- நீ நெருப்பை போன்றவள் ,அதனால் தான் உன்னை எங்கு பார்த்தாலும் ஓடி சென்று அணைக்க துடிக்கிறேன்....
- நீ இல்லாத இடமெல்லாம் இருட்டாகவே இருக்கிறது . மின்சாரத்துக்கு சொன்னது அல்ல. எதிர்கால சம்சாரமான காதலிக்கு சொன்னது...!!



## என் காதலிக்கு ஒரு கவிதை

உன் மை வைத்த விழிகள்
என்ன மாயம் செய்தனவோ
எப்போதும் உன்னையே நான்
காண

உன் மழலை.பேச்சு
என்னை மயக்கிப் போனதே
என் மனதை
அத்தோடு அழைத்துப் போனதே

அளவில்லா உன் அழகு
என்னை ஆட்டிப்படைக்குதே.
தெளிவில்லா உன் நிழலை
என் கைகள் கட்டி அணைக்குதே
உன் சிரிப்பைப் பார்த்து
என் சிரிப்பு தோன்றுதே!

பெண்ணே என் மனதில்
உனக்கொரு மாளிகை கட்டியுள்ளேன்
இதயம் போல் வடவமிருக்கும்
அதில் என் உயிர்
துடித்துக்கொண்டிருக்கும்
என்றென்றும் உனக்காக.



## ஒரு காதலியின் ஆசை

ஒரு பெண்ணின் கனவில் தேவதை தோன்றி, உனக்கு என்ன வேண்டுமோ... அதை கேள்? என்று சொன்னது.

**பெண்:** என் காதலர் முழித்துக் கொண்டிருக்கும்போதெல்லாம் என்
மீது மட்டும் கண்ணாக இருக்கவேணும்..

**தேவதை:** அப்புறம்...??

**பெண்:** அவர் வாழ்க்கையில் என்னைத் தவிர வேறு எதுவுமே முக்கியமாக இருக்கக்கூடாது...

**தேவதை:** அப்புறம்...??

**பெண்:** அவர் தூங்கும்போது நான் பக்கத்தில் இல்லாமல் தூங்கவே
கூடாது...

**தேவதை:** அப்புறம்...??

**பெண்:** அவர் காலையில் எழுந்திருக்கும்போது என் முகத்தில் தான்
முழிக்க வேணும்...

**தேவதை:** அப்புறம்...??

**பெண்:** நான் இல்லாமல் அவர் எங்கயும் போகக் கூடாது...

**தேவதை:** அப்புறம்...??

**பெண்:** என் மீது ஒரு கீறல் பட்டால் கூட அவர் வா[illegible] வருத்தத்தில் மனமுடைஞ்சு போக வேணும்

**தேவதை:** அப்புறம்...??

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரீக நகைக்கொள்ளை

- அக்கினிக்குமரன்

**உண்மையில் அரசாங்கம் நகைகளை கொடுக்க விரும்பினால் எந்தவித ஆவணங்களுமே தேவையில்லை. ஏனெனில் அடகு நகைகள் ஒரு பையில் போடப்பட்டு அதனுடன் பற்றுச் சீட்டின் ஒரு பிரதி வைக்கப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டு இருக்கும். அதில் அடகு வைத்தவரின் பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம் எனச் சகல விபரங்களும் அடங்கியிருக்கும். அதன் மூலம் உரியவர்களின் பெயர்களை அறிவித்து அவர்களிடம் ஆவணங்கள் கோரப்படாமலே நகைகளைத் திருப்பி வழங்க முடியும்.**

**இப்படியான நிலையில் ஆவணங்களைக் கோருவது சட்டபூர்வமமாக உரிமை கோரப்படாதவை என்ற பேரில் எஞ்சிய நகைகளை கையகப்படுத்த நடத்தப்படும் நாகரீகக் கொள்ளையாகும்.**

அண்மையில் குருநாகல் பகுதியில் உள்ள அம்மன் கோவில் ஒன்றில் சொகுசு வாகனங்களில் துப்பாக்கிகள் சகிதம் வந்த நபர்களினால் நகைகளும், பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கொள்ளை போன நகைகளின் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபா. திருடப்பட்ட பணம் ஏறக்குறைய மூன்று இலட்சம் ரூபா. இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்ன வென்றால் இந்தக் கொள்ளை மேற்கொள்ளப் பாவிக்கப்பட்ட சொகுசு வாகனத்தின் பெறுமதி ஏறக்குறை ஒரு கோடி இருக்கலாம்.

சொகுசு வாகனத்தில் வருமளவுக்கு வசதி படைத்த கொள்ளையர்கள் இந்த சிறிய தொகைக்காகவா ஒரு பெரும் கொள்ளையை நடத்தினார்கள் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாது. எனவே இந்தச் சம்பவத்துக்கு கொள்ளையை விட வேறு நோக்கம் கூட முக்கியமாக இருந்திருக்கலாம் எனவும் கருத முடியும். எனவே இந்தக் கொள்ளையின் பின்னால் சக்தி மிக்க கரங்கள் இருக்கலாம் என்ற ஊகத்தை தவறென்று சொல்லி விடமுடியாது.

எப்படியிருப்பினும் இந்தக் கொள்ளை தொடர்பாக விசாரணை செய்ய இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட பொலிஸ் குழுக்களோ நியமிக்கப்படலாம். ஆனால் அவர்கள் ஒருபோதும் கொள்ளையர்களைக் கண்டு பிடிக்கமாட்டார்கள். நாள்கள் செல்லச் செல்ல கொள்ளை பற்றிய பரபரப்பு அடங்கிவிடும்.

இது வெறும் கற்பனையான ஒரு எதிர்பார்ப்பு அல்ல. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் முடிவடைந்த பின்பு இந்துக் கோவில்களில் நிகழ்ந்து வரும் கொள்ளைகளும் , விசாரணைக்குழு அமைப்பதும் தொடர்கதையாகி வருகிறது. ஆனால் இதன் போது குற்றவாளிகள் எவரும் இனம் காணப்படுவதுமில்லை. அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதுமில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்படியான கோயில் கொள்ளைகள் அடுத்தடுத்து இடம்பெற்றன. சில ஆலயங்களில் நகைகள், பணம் மட்டுமன்றி தொன்மையான தெய்வச் சிலைகளும் திருடப்பட்டன. திருமலை மாவட்டத்திலும் சில இடங்களில் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றன. தம்புள்ளவில் பட்டப் பகலிலேயே கோவில் உடைக்கப்பட்டு முத்துமாரியம்மன் சிலை கிணற்றுக்குள் வீசப்பட்டது. கொழும்பு பம்பலப்பிட்டியிலும் ஒரு இந்துக் கோவிலை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பாணமையில் ஒரு கோவிலுக்குள் புத்த பிக்கு ஒருவர் புகுந்த பின்னர் கொள்ளையர் சிலையைத் தூக்கிச் சென்ற சம்பவம் கூட இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் சில காலம் தொடர்ச்சியாக கோவில் வாகனங்களும் அவற்றின் பாகங்களும் திருடப்பட்ட சம்பவங்களை நாம் அறிவோம்.

இப்படியான கொள்ளைகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகப் பரப்பான செய்திகள் வெளிவருவதுண்டு. ஆனால் அதன் பின்னர் எந்த ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

மதம் என்பது ஒரு இனத்தின் கலாசாரம் சம்பந்தப்பட்ட விடயம். எனவே தமிழ் மக்களின் கலாசாரம் திட்டமிட்ட வகையிலே இப்படியான சம்பவங்களால் இலக்கு வைக்கப்படுகிறதா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு எப்போதுமே உண்டு. இந்தக் கொள்ளையின் பின்னணியில் சக்தி மிக்க கரங்கள் உண்டு என்பதற்கு குருநாகலில் கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட சொகுசு வாகனத்தை அடிப்படையாக வைத்து கருதமுடியும்.

இப்படி இந்து ஆலயங்களில் மதவிரோத அடிப்படையில் தொடர் கொள்ளைகள் இடம்பெற்று வரும் வேளையில் ,இன்னொரு நாகரீகக் கொள்ளை கருணை என்ற பேரிலும் நன்மை செய்வது என்ற பேரிலும் அரங்கேற்றப்பட்டுள்ளது.

அதாவது அண்மையில் வட பகுதிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சியில் வைத்து போர் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ வைப்பகத்தில் தமிழ் மக்கள் அடகு வைத்த நகைகளை திருப்பி வழங்கினாராம். ஏனையோருக்கும் மிக விரைவில் நகைகள் வழங்கப்படும் என வாக்குறுதியும் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் எதிர்பார்க்கப்படும் காலத்தில் இப்படியான கிள்ளித் தெளிப்புக்கள் இடம்பெறுவது அப்படி ஒன்றும் அதிசயம் இல்லை. ஆனால் இந்த நகை வழங்கல் கூட இன்னுமொரு விதமான சட்டபூர்வமான நகைக்கொள்ளை தான் என்பதை எமது மக்கள் நன்றாகவே புரிந்து வைத்துள்ளனர்.

ஜனாதிபதி கிளிநொச்சியில் வைத்து சிலருக்கு தமிழீழ வைப்பகத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளை வழங்கிய அடுத்த நாள் இராணுவப் பேச்சாளர் அஜித் ரோஹண ." புலிகளின் வங்கிகளில் நகைகளை அடகு வைப்பவர்கள் இராணுவ சிவில் காரியாலயங்களில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து தமது நகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்" என அறிவித்தார்.

இங்கு தான் ஒரு முக்கியமான தந்திரம் கையாளப்படுகிறது. போரின் போது மக்கள் எறிகணை வீச்சுக்கள் மத்தியிலும் விமானக்குண்டு வீச்சுக்கள் மத்தியிலும் பல முறை இடம்பெயர்ந்தனர். இறுதியில் முள்ளிவாய்க்காலில் பேரவலங்களையும் சந்தித்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் உரிமைகளையும் ,உடமைகளையும், உடல் உறுப்புக்களையும் இழந்தனர். பெரும்பாலானோர் உடுத்த உடுப்புடனேயே போர் வலயத்தை விட்டு வெளியேறினர். அப்படி உயிரை மட்டும் காத்து ஓடிய மக்களால் ஆவணங்களைப் பாதுகாக்க முடியுமா? அப்படி ஒரு சிலர் பாதுகாத்துக் கொண்டு வந்தாலும் 5 வருடங்கள் நகைகள் திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்ற நிலையில் அவ்வை பத்திரப்பட்டிருக்குமா? எனவே ஆவணங்கள் சமர்ப்பித்தே நகையை பெறவேண்டுமானால் அது சாத்தியமானதாக இருக்க முடியாது.

உண்மையில் அரசாங்கம் நகைகளை கொடுக்க விரும்பினால் எந்தவித ஆவணங்களுமே தேவையில்லை. ஏனெனில் அடகு நகைகள் ஒரு பையில் போடப்பட்டு அதனுடன் பற்றுச் சீட்டின் ஒரு பிரதி வைக்கப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டு இருக்கும். அதில் அடகு வைத்தவரின் பெயர், விலாசம், அடையாள அட்டைஇலக்கம் எனச் சகல விபரங்களும் அடங்கியிருக்கும். அதன் மூலம் உரியவர்களின் பெயர்களை அறிவித்து அவர்களிடம் ஆவணங்கள் கோரப்படாமலே நகைகளைத் திருப்பி வழங்க முடியும்.

இப்படியான நிலையில் ஆவணங்களைக் கோருவது சட்டபூர்வமாக உரிமை கோரப்படாதவை என்ற பேரில் எஞ்சிய நகைகளை கையகப்படுத்த நடத்தப்படும் நாகரீகக் கொள்ளையாகும்.

எனவே ஜனாதிபதி ஒரு புறம் மக்களின் நகைகளை நாகரீகமான முறையில் கொள்ளையிட்டுக் கொண்டே நகைகளை திருப்பி வழங்கும் உத்தமராக நாடகமாடும் விடயத்தை எமது மக்கள் புரிந்து கொள்ள முடியாத முட்டாள்கள் அல்ல.

இந்துக் கோயில்களில் நடத்திய சட்டபூர்வமற்ற கொள்ளைகளிலும் சரி, அடகு வைக்கப்பட்ட தமிழ் மக்களின் நகைகளிலும் சரி கொள்ளையர்கள் பக்கமே தொடர்ந்தும் காற்று வீசுவது இலங்கையில் அப்படி ஒன்றும் பெரும் அதிசயமல்ல.




**மதம் என்பது ஒரு இனத்தின் கலாசாரம் சம்பந்தப்பட்ட விடயம். எனவே தமிழ் மக்களின் கலாசாரம் திட்டமிட்ட வகையிலே இப்படியான சம்பவங்களால் இலக்கு வைக்கப்படுகிறதா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு எப்போதுமே உண்டு. இந்தக் கொள்ளையின் பின்னணியில் சக்தி மிக்க கரங்கள் உண்டு என்பதற்கு குருநாகலில் கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட சொகுசு வாகனத்தை அடிப்படையாக வைத்து கருதமுடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## ஆன்மீகத் தொடர் - 36

சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றை யெல்லாம் தொகுத்து எழுதிய தொடர்



### இரண்டு பல்லிகள்

ஒரு முறை பாபா மசூதியில் அமர்ந்திருந்தார். ஒரு பக்தரும் அவர் முன்னர் அமர்ந்திருந்தார். ஒரு பல்லி 'டிக்டிக்' துடிப்பை விளைவித்தது. ஆச்சரியத்தால் உந்தப்பட்ட அவர் "பல்லியின் இந்தத் துடிப்பு ஏதேனும் பின்விளைவு காட்டுதல் குறித்ததா? அது நல்ல அடையாளமா அல்லது தீய சகுனமா" என்று பாபாவைக் கேட்டார். அந்தப் பல்லி யின் சகோதரி அதனைப் பார்க்க ஔரங்கபாத்திலிருந்து வந்து கொண்டிருப்பதாயும் அதனால் அந்தப்பல்லி மிகவும் மகிழ்ச்சியுற்றிருக்கிறது என்றும் பாபா கூறினார். பாபா சொல்லுவதன் அர்த்தம் புரியாமல் அவர் மௌனமாக அமர்ந்து இருந்தார். உடனேயே ஔரங்காபாத்திலிருந்து குதிரையில் ஒரு பெருந்தகை பாபாவைப் பார்க்க வந்தார். அவர் மேற்கொண்டு பயணத்தைத் தொடர விரும்பினார். ஆனால் அவரது குதிரை பசியாய் இருந்தபடியால் நகர்வதாக இல்லை. அதற்குக் கொள்ளு தேவைப்பட்டது. கொள்ளு கொண்டு வருவதற்காகத் தனது தோளில் இருந்து ஒரு பையை எடுத்தார். தூசியைப் போக்குவதற்காகத் தரையில் அடித்தார். அதிலிருந்து ஒரு பல்லி விழுந்தது. எல்லோர் முன்னிலையிலும் அது சுவரில் ஏறியது. கேள்வி கேட்ட பக்தரிடம் அந்தப் பல்லியை நன்றாகக் கவனிக்கும் படி பாபா கூறினார். அது உடனே தனது பெருமையான நடையுடன் தன் சகோதரியை நோக்கிச் சென்றது. நீண்ட காலத்துக்குப் பின்னர் இரண்டும் சந்தித்தன. ஒன்றையொன்று முத்தம் கொடுத்துக் கட்டியணைத்துக் கொண்டன. சுற்றிச் சுற்றி ஓடி வந்து அன்பால் நடனம் ஆடின. சீரடி எங்கே இருக்கிறது? ஔரங்காபாத் எங்கே இருக்கிறது? குதிரையிலிருந்த மனிதர் பல்லியுடன் எங்ஙனம் ஔரங்காரபாத்திலிருந்து வந்தார்? இரண்டு சகோதரிகள் சந்திக்கப் போவதை எங்ஙனம் பாபா முன்னாலேயே தீர்க்க தரிசனம் செய்தார். இவையெல்லாம் உண்மையிலேயே மிகவும் ஆச்சரியமானது தான். பாபாவின் எங்கு நிறை பேரறிவையும் அனைத்தையும் உணரும் ஆற்றலையும் மெய்ப்பிக்கிறது. *

அன்புடனும் பக்தியுடனும் அளிக்கப்படும் எத்தகைய சிறிய பொருளையும் பாராட்டுதல்களுடன் ஏற்றுக் கொள்வார். ஆனால் அதுவே பெருமையுடனும் இறுமாப்புடனும் அளிக்கப்பட்டால் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார். தாமே ஸச்சி தானந்தத்தினால் (ஸத்து, சித்து, ஆனந்தம்) முழுமையும் நிரம்பப் பெற்றிருந்தமையால் வெறும் புறச் சம்பிரதாயங்களை அவர் பெருமளவு இலட்சியம் செய்வதில்லை. அடக்க வொடுக்கத்துடனும், பணிவான உணர்வுடனும் ஒன்று சமர்ப்பிக்கப் படுமானால் அதை அவர் வரவேற்று பேரார்வத்துடன் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொண்டார். உண்மையில் ஸாயிபாபாவைப் போன்ற ஸத்குருவைக் காட்டிலும் மிகுதி யான தாராளம் தயை முதலான பண்புகள் அமையப் பெற்ற பிறிதொருவர் எவரும் இலர். அவரைச் சிந்தாமாணிக் கல்லுக்கோ (நினைத்தவை அனைத்தையும் தரும் ஓர் அற்புத பொன்மணி) கல்பகத்தருவுக்கோ (விருப்பங்களை ஈடேற்றும் தெய்வீக மரம்) காமதேனுவுக்கோ (விருப்பங்களை ஈடேற்றும் பசு) ஒப்பிட முடியாது. ஏனெனில் நாம் விரும்பினவற்றை மட்டுமே அவைகள் அளிக்கின்றன. ஆனால் ஸத்குருவோ, கருதுதற்கியலாத ஆராய்ந்து அறிதற்கியலாத, மெய்ப்பொருளாம் விலை மதிப்பற்ற பொருளை நமக்கு நல்குகிறார்.

(ஞானத்தை தேடுவோம்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 644

**மேலிருந்து கீழ்**

1- நிகழக்கூடிய /தாக்கத்தை ஏற்படுத்தவல்ல.
2-திறை.
3-கொலைகாரப்பாதகன்.
4-பணத்தை இப்படியும் குறிப்பிடுவதுண்டு..
5-செருக்கு.
6-குரங்குக்கு இது ஒரு கரம் போன்றது.
8-காசு.
10-இரத்தல்.
12-மிருகங்களை பிடிப்பதற்கு வைக்கப்படும் தடம்
14-மேடையை மறைக்கும் படுதா.
16-சிறந்தவை.
19- மெல்லிய உலோகத்தால் ஆக்கப்படுவது.
20-இரண்டும் இரண்டும்.
22-தேசம்.

**இடமிருந்து வலம்**

1-காலக்கெடு.
5-அளவுக்கு மிஞ்சிய ஆசை.
7-சாய்ந்து விழுதல்.
8-வெளிச்ச வேளை.
9-திருமணம்.
11-யானையை அடக்குபவன்.
13-உழைத்துப் பெறு.
15. தலைக்கு மேலான வெளி.
16-(ஏதேனும் திரவத்தில்) தோய்.
17-கீறு.
18-குறைதல்.
20-நாங்கள்.
21-பலதும் சேர்ந்தவை .
23. சிறுபானை போன்ற பாத்திரம்.
24. பேரழிவு தருவது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | ■ | 17 | |
| 18 | | 19 | | ■ | 20 | | ■ |
| | ■ | 21 | | | | ■ | 22 |
| ■ | 23 | | | ■ | 24 | | |

அனுப்புபவர் பெயர்:---------------------------------

விலாசம்:----------------------------------------

-----------------------------------------------

கையொப்பம்:--------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**தா.சிறீதரன்,,**
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

**தருண்யா பிரேமதாஸ்,**
கொட்டாவத்தை,கல்வளை
சண்டிலிப்பாய்.

**அ.ராதாமணி,**
ஏ.ஆர்.எஸ்.கண்டிவீதி,
சாவகச்சேரி.

**சி.சம்பூரணி,**
அரசடி வீதி, வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

**அ.பொ.திரவியநாதன்,**
பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.

### போட்டி இல. 644

■ சொற்சிலம்பம் போட்டி 644ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே நவம்பர் 19ஆம் மற்றும் நவம்பர் 26ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 641இல் பரிசு பெற்றோர்

1
**வே.சுபிதா,**
புளியம்பொக்கணை,
பரந்தன்.

2
**கே.இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

3
**இ.ரேணுகா,**
இல:-85/4 கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி 642இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. சதிபதி
2. பாதகம்
3. தினம்
4. அந்தர்
5. சதம்
6. தின்
9. திறப்பு
12. மாலை
13. குடும்பம்
14. அம்மி
15. நட
16. கோதுமை
17. ரசம்
18. விடுதி
20. பாசி


**இடமிருந்து வலம்**

1. சம்பாதி
4. அசதி
7. தனவந்தன்
8. பதிகம்
10. தம்
11. திறம்
12. மார்
14. அலை
15. நடு
16. கோபுரம்
18. விடம்
19. சமிபாடு
21. மையம்
22. சிதிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுக்குள் வாழ்ந்தவன்

- சமரன்


சாகசம் - 03

**1982 ஆம் ஆண்டு மிகச் சில ஆயுதங்களோடு மட்டுமே புலிகள் அமைப்பு இயங்கிக் கொண்டிருந்தது. எனவே ஆயுதங்களை பெற்று இயக்கத்தைப் பலப்படுத்த ஒரே வழி இராணுவம் மீதோ அல்லது பொலிஸ் மீதோ தாக்குதல் நடத்தி அவர்களின் ஆயுதங்களைப் பெறுவது தான்.**

சங்கரின் வீரத்துக்கும், திட்டமிடலுக்கும் மிகச் சிறந்த உதாரணம் நெல்லியடியில் பொலிஸ் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தான். 1982 ஆம் ஆண்டு மிகச் சில ஆயுதங்களோடு மட்டுமே புலிகள் அமைப்பு இயங்கிக் கொண்டிருந்தது. எனவே ஆயுதங்களைப் பெற்று இயக்கத்தைப் பலப்படுத்த ஒரே வழி இராணுவம் மீதோ அல்லது பொலிஸ் மீதோ தாக்குதல் நடத்தி அவர்களின் ஆயுதங்களைப் பெறுவது தான். ஆனால் இராணுவத்தின் மீது அப்போது தாக்குதல் நடத்துவது என்பது மிகக் கடினம். அதற்கு பெரும் ஆளணியும் ஆயுத பலமும் தேவை.

இராணுவச் சமநிலையில் கோலியாத்தைப் போல இராட்சத பலம் கொண்ட இலங்கை இராணுவத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் தாவீது போல சிறுகவண் கொண்டு போரிடுவது என்பது கத்தி மேல் நடப்பது போலதான்.

சிறிது பிசகினாலும் தாக்குதலுக்குப் போன போராளிகளையும் ஆயுதங்களையும் இழக்க வேண்டியிருக்கும். அப்போது இருந்து சூழ்நிலையில் ஒவ்வொரு போராளியும் நூறு போராளிகளுக்குச் சமம். ஆயுதங்களும் அப்படித் தான். எனவே தமது தரப்பு இழப்பைக் குறைத்து எதிரிக்கு அடித்து, அவர்களின் ஆயுதங்களை கைப்பற்ற புலிகளுக்கு இருந்து ஒரே வழி பொலிஸ் ரோந்து அணிகள் மீது தாக்குதல் தொடுப்பது தான்.

ஏனெனில் இராணுவத்தைப் போல பொலிஸார் அதிநவீன ஆயுதங்களோடு வருவதில்லை. வருவதென்றாலும் நாலைந்து பேர் தான் வருவார்கள். எனவே தாக்குவதும் எளிது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து தினமும் ஒரு ஜீப்பில் ஐந்து பொலிஸ்காரர்கள் நெல்லியடி வரை ரோந்து வருவது வழமை. எனவே அந்த அணியைத் தாக்குவது என்று முடிவாயிற்று. சாதாரண இளைஞர்கள் போல சைக்கிளில் திரிந்து எத்தனை மணிக்கு பொலிஸ் ஜீப் வருகிறது எத்தனை மணிக்கு திரும்பிச் செல்கிறது என்று நோட்டமிட்டார்கள். தாக்குதலை எங்கே நடத்தலாம் என்றும் அதற்கான வழிகள் இருக்கின்றனவா என்பதையும் புலிகள் அவதானித்தார்கள். எல்லாம் சரி. தாக்குதல் நடத்த தலைமை அனுமதி வழங்கியது. இந்தத் தாக்குதலுக்கு சங்கர் தலைமையேற்றான்.

வியாபாரிகள், தொழில் செய்வோர், பல்கலைக் கழக மாணவர்கள் போர்வையில் தான் வீடுகளில் புலிகள் வாடகைக்கு இருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் தாக்குதல் பற்றி அறிவிக்கப்பட்டது. ஒரேயடியாக எல்லோரும் தாக்குதலுக்குச் செல்ல முடியாது. அப்படிச் சென்றால் பார்ப்பவர்கள் யாரும் சந்தேகப்பட்டு விட்டால் காரியம் கெட்டு விடும். எனவே சிலர் சைக்கிள்களிலும் சிலர் மினிபஸ்களிலும் சாதாரண இளைஞர்கள் போலப் புறப்பட்டு நெல்லியடிக்குச் சென்றார்கள். அங்கே தற்காலிகமாக ஒரு வீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்றவர்கள் எல்லோரும் வீட்டுக்குள் புகுந்து கொண்டார்கள். அன்று மாலை நடைபெறவுள்ள தாக்குதல் குறித்த திட்டத்தை ஏனைய போராளிகளுக்கு சங்கர் விளக்கினான். அதன் பின்னர் சாப்பிட்டு விட்டு அவர்கள் ஓய்வெடுக்கவும் சூரியன் மேற்கு நோக்கிச் சரியவும் சரியாக இருந்தது. எல்லோரும் சாரங்களை இறுகக் கட்டிக்கொண்டு சண்டைக்குப் புறப்பட்டார்கள்.

நெல்லியடி சந்திக்கு அண்மையாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்குகளிலும் நிலையெடுத்தார்கள். ஆனாலும் எவருக்கும் சந்தேகம் வராதபடி கடைகளில் சாமான் வாங்குபவர் போலவும் பஸ்ஸுக்கு காத்திருப்பவர்கள் போலவும் வியாபாரிகள் போலவும் பாசாங்கு பண்ணிக் கொண்டிருந்தார்கள். தூரத்தே ஜீப்பின் உறுமல். எல்லோரும் உஷாரானார்கள். சங்கர் இடுப்பில் கட்டியிருந்த துப்பாக்கியை ஒரு முறை தொட்டுப்பார்த்துக் கொண்டான். இன்னும் சிறிது நேரத்தில் வெடிப்பதற்கு தயாராக காத்திருந்தது. சுற்றிலும் நிலையெடுத்திருந்த சக போராளிகளுக்கு சங்கர் கண்களால் சைகை காட்டினான். ஜீப் வருவது அவர்களுக்கும் தெரிந்தது. எல்லோரது நெஞ்சும் அடுத்து நிகழப்போகும் சண்டையை நினைத்து 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. இவர்கள் எதிர்பார்த்தது போல சந்தியில் வந்து ஜீப் ஆறுதல் எடுத்துக் கொண்டது. சாதாரண நபர்கள் போல வேடமிட்டிருந்த போராளிகள் ஜீப்பை நோக்கி நகரத் தொடங்கினார்கள். இனி சண்டையைத் தொடங்க வேண்டியது தான் மிச்சம். ஆனால் தாக்குதலுக்குப் பொறுப்பான சங்கர் சற்றுத் தாமதிக்கும்படி சைகை காட்டினான். அவனது முகத்தில் குழப்ப ரேகைகள். எல்லோரையும் பின்வாங்குமாறு கண்களால் கட்டளையிட்டு விட்டு சாதாரண இளைஞன் போல அந்த இடத்தை விட்டுக் கடந்தான்.

பிரதான வீதியை விட்டு பிரிந்து செல்லும் ஒழுங்கைக்கால் சென்று எல்லோரும் தங்கியிருந்த வீட்டை அடைந்தார்கள்.

"வடிவா அடிச்சிருக்கலாம் தானே" என்று எல்லோரும் சங்கரைப் பார்த்துக் கேட்டார்கள்.

"அடிச்சிருக்கலாம் தான். ஆனால் ஒரு சிக்கல்" என்று சங்கர் சொன்னான்.

"என்ன சிக்கல்?"

"இண்டைக்கு வழமையா வாற சிங்கள இன்ஸ்பெக்டர் வரேல்லை. திருச்சிற்றம்பலம் என்ற தமிழ் இன்ஸ்பெக்ரர் தான் வந்தவர். அவர் எங்களுக்கும் சப்போட். நாளைக்கு அடிப்பம்"

**"வடிவா அடிச்சிருக்கலாம் தானே" என்று எல்லோரும் சங்கரைப் பார்த்துக் கேட்டார்கள். "அடிச்சிருக்கலாம் தான். ஆனால் ஒரு சிக்கல்" என்று சங்கர் சொன்னான். "என்ன சிக்கல்?" "இண்டைக்கு வழமையா வாற சிங்கள இன்ஸ்பெக்டர் வரேல்லை.**

(சாகசங்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொறியாளன்'' என்ற படத்தில் ரக்ஷிதா என்ற பெயரில் நடித்தவரைத்தான் ஆனந்தி என்று பெயர் மாற்றி 'கயல் படத்தில் நடிக்க வைத்தார் பிரபு சாலமன். 'பொறியாளன் படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான இயக்குநர் வெற்றிமாறன் அடுத்து 'அட்டகத்தி தினேஷை வைத்து இயக்கும் ஒருமணித்தியாலப் படமான 'விசாரணை படத்திலும் ஆனந்திதான் நாயகியாம்.

# பெயர் மாறிய ராசி



# நான் குண்டுதான்

தன்னை குண்டான நடிகை என்று கிண்டல் செய்யும் சக சினிமாக்காரர்களுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, நடிகை சோனாக்ஷி சின்ஹா தான் இருக்கும் சமூகவலைத்தளத்தில் ஒரு எலும்புக்கூட்டின் படத்தைப் போட்டு "நான் இதுபோல் ஒருநாளும் ஆக மாட்டேன்" என்று பதி விட்டுள்ளார். அத்தோடு தான் குண்டாக இருப்பதை எண்ணி ஒருபோதும் கவலைப்பட்டதில்லை என்றும் தன் அழகே குண்டாக இருப்பதுதான் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.



# 100 ஏக்கர் அரண்மனை

சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்துக் காக, சென்னை கிழக்கு கடற்கரை சாலை, கோவளம் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவுகொண்ட நிலத்தில் அரண்மனை மற்றும் தர்பார் செட்டை பிரமாண்டமாக அமைத்துவருகிறார் கலை இயக்குநர் முத்துராஜ்.

# விஜய்க்கு வயசாகிவிட்டதா?

இளைய தளபதி விஜயின் திரைப்பயணத்தில் திருப்புமுனையான படம் என்றால் பூவே உனக்காக தான். இதைப் பல முறை மேடைகளில் கூட கூறியுள்ளார் இளைய தளபதி. தற்போது சிம்புதேவன் இயக்கத்தில் நடிக்கவிருக்கும் இவர், அடுத்து அட்லீ இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார். இந்தப்படம் பூவே உனக்காக பாணியில் காதல் கதையம்சம் கொண்ட கதையாம். ஆனால் எனக்கு 40 வயசாகிடுச்சு, இனி இதெல்லாம் வேண்டாம், ஒரு அதிரடிக் கதையாகத் தயார் செய்யுங்கள் என்று அட்லீக்கு கூறிவிட்டாராம் விஜய்.



# த்ரிஷாவுக்கு தங்கமனம்

நடிகை த்ரிஷா செல்லப்பிராணிகள் மீது மிகவும் பாசம் கொண்டவர். இவ்வாறு தன்னுடைய செல்லப்பிராணிகளுக்காக அவர் தீபாவளிப்பண்டிகையின் போது பட்டாசு வெடிப்பதில்லையாம்.

பொதுவாகவே பட்டாசு பிடிப்பது எனக்குப் பிடிக்காது. அதனால் சூழலும் ஒலியும் மாசடையும். இதைவிட என்னுடைய செல்ல நாய்க்குட்டி பட்டாசுச் சத்தம் கேட்டால் பயந்துவிடும். எனவே தீபாவளிச் சந்தோஷத்தை என் நாய்க்குட்டியும் அனுபவிக்க வேண்டும் என்பதால் பட்டாசு வெடிப்பதை நான் தவிர்த்து விட்டேன்என்கிறார் த்ரிஷா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அசத்தும் சந்தானம்


எந்திரன் படத்துக்கு பிறகு ரஜினி நடிக்கும் லிங்கா படத்திலும் நகைச்சுவை செய்கிறார் சந்தானம். எந்திரனில் கொஞ்ச காட்சிகளே தலைகாட்டிய சந்தானம் இதில் படம் முழுக்க ரஜினியோடு வருகிறாராம். அதனால் சந்தானத்துக்கு ஏக சந்தோஷம். கூடவே வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்துக்கு பிறகு இனிமேல் கதாநாயகனாக மட்டுமே நடிப்பேன் என்ற பிடிவாதத்தையும் அவர் விட்டுவிட்டாராம். நமக்கு நகைச்சுவை மட்டும் தான் வரும். மக்களும் அதைத்தான் நம்மிடம் எதிர்பார்க்கிறார்கள் என்ற உண்மையை உணர்ந்தவராக தற்போது நகைச்சுவைப் பாத்திரங்களில் மட்டும் கவனம் செலுத்துகிறார். அரண்மனை படத்தில் பேசப்பட்டதை விடவும் லிங்காவில் தன்னுடைய நகைச்சுவை அதிகம் பேசப்படும் என சந்தானம் நம்புகிறார். இந்த சந்தோஷத்தில் படப்பிடிப்புத் தளத்தில் ரஜினி போல மிமிக்ரி செய்து ரஜினியையே அசத்துகிறாராம் சந்தானம்.

# நடிப்புப் பிசாசு

மிஸ்கின் இயக்கும் 'பிசாசு' படத்தில் நாயகியாக நடிக்கும் பிரயாஹரா, கதைப்படி வானத்தில் மிதந்தபடியே இருப்பாராம். அதற்காகப் பெரும்பாலான காட்சிகளில் 70 அடி உயரத்துக்கு கயிறு கட்டி தூக்கி நிறுத்தியபடியே நடிக்க வைத்திருக்கிறார்கள். இதனால் படப்பிடிப்பின்போது பலமுறை தவறி விழுந்தும் சுவரில் மோதியும் காயம்பட்டிருக்கிறார். படத்தில் மட்டுமல்ல நடிப்பிலும் பிரயாஹரா பிசாசுதான் போலும்.



பிரியாஹா



# நன்றி சொல்ல உனக்கு...

நகைச்சுவை கலந்த பாணியில் கதை சொல்லி வந்தவேகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தவர் இயக்குநர் ராஜேஷ். சிவா மனசில சக்தி, பாஸ் என்கிற பாஸ்கரன், ஒரு கல் ஒரு கண்ணாடி என்று அவரின் முதல் மூன்று படங்களும் வரிசையாக வெற்றி பெற தயாரிப்பாளர்களின் பந்தயக் குதிரையாக ராஜேஷ் இனங்காணப் பட்டார். ஆனால் குதிரை எப்போதும் ஒரே மாதிரி ஓடுவதில்லை. சில சமயங்களில் அது ஆளைத் தலைகுப்புற தள்ளியும் விடும். அப்படி ராஜேஷை தள்ளிய குதிரைதான் ஆல் இன் ஆல் அழகுராஜா. அந்தப்படம் ராஜேஷை மட்டுமல்ல நடிகர் கார்த்தியையும் சேர்த்து உதைத்து தள்ளியது. மெட்ராஸ் படத்தின் மூலம் மீண்டும் கார்த்தி எழுந்து விட்டார். ஆனால் ராஜேஷை கைதூக்கி விட்டுத்தான் யாருமில்லை. எல்லா நடிகர்களும் ராஜேஷைக் கண்டால் நழுவி விடுகிறார்களாம். இருப்பினும் ராஜேஷுக்கு நன்றிமறக்காமல் ஒருவர் உதவி செய்ய முன் வந்துள்ளார். அவர் வேறு யாருமல்ல. ஆர்யாதான். ராஜேஷின் அடுத்த படத்தில் நடிப்பதோடு அதைத் தானே தயாரிக்கவும் செய்கிறாராம் ஆர்யா.

# தமிழுக்கு மவுசு

'மஞ்சப்பை' படத்தின் தெலுங்குப் பதிப்பு உரிமையை வாங்கி தனது 151ஆவது படமாக இயக்குகிறார் தாசரி நாராயணராவ். அத்தோடு ராக்லைன் வெங்கடேஷ், அமிதாப்பை வைத்து இந்தப் படத்தை ஹிந்தியிலும் இயக்கவுள்ளார் அவர். முன்பெல்லாம் பிறமொழிப்படங்களையே தமிழுக்கு கொண்டுவரும் பழக்கம் இருந்தது. இப் போது தமிழில் இருந்து பிறமொழிகளுக்கு படங்களை ஏற்றுமதி செய்யும் காலம் உருவாகி விட்டது.

# பிழைக்கத் தெரிந்தவர்

பீட்சா படத்தில் துறுதுறு நடிப்பால் அனைவரையும் கவர்ந்தவர் ரம்மியா நம்பீசன். நவர் நடிகை மட்டுமல்ல. நல்ல பாடகியும் கூட. பாண்டியநாடு படத்தில் இடம்பெற்ற 'பை பை' என்ற பாடலைப் பாடியவரும் இவர்தான். இந்த நிலையில் ரம்மியா நம்பீசன் நடித்த சில படங்கள் இன்னும் திரைக்கு வராமல் இழுபறியில் உள்ளன. முறியடி, ரெண்டாவது படம், நல்லா இருந்த ஊரும் நாலு திருடர்களும் போன்ற படங்கள் இன்னும் திரைக்கு வராமல் இருப்பதால் புதிய படங்களில் வாய்ப்புக் கிடைக்காமல் கலங்கினார் ரம்மியா. ஆனாலும் இப்போது அந்தக் கலக்கத்தை தூக்கி எறிந்துவிட்டு, பின்னணிப் பாடல் பாடுவதில் முழுக்கவனத்தையும் செலுத்த தொடங்கிவிட்டார் அவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு தனி மரத்தின் கதை

"கவலைப்படாதே நண்பா, நான் மறுபடியும் இங்கு வருவேன்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டுக் குருவி பறந்து சென்றது.

குருவி வரும் என்று இரவும் பகலும் மரம் காத்துக் கொண்டிருந்தது. பகல்கள் போயின, இரவுகள் போயின. நாள்கள் நகர்ந்தன. ஆனால் நீலக்குருவி மட்டும் வரவேயில்லை.

மரம் கண்ணீர் விட்டு அழுதது. அதன் கண்ணீர், துளித் துளியாகக் கீழே விழுந்தது. ஒருநாள் காலையில் தன் கண்ணீர் கீழே குளமாகத் தேங்கியிருப்பதைக் கண்டது அந்த மரம். இப்போது குளத்துடன் பேசத் தொடங்கியது மரம். நாள் முழுவதும் பேசிக்கொண்டே இருந்தது. இருந்தாலும் பேசுவதற்கான கதைகள் ஒரு நாளில் தீர்ந்துவிடுமா என்ன?

தன் காலை குளத்தில் நனைத்தபடி மரம் பேசிக்கொண்டேயிருந்தது. பேசிக்கொண்டே குளத்தில் பிரதிபலித்தத் தன் கிளையைப் பார்த்தது. மரத்தால் உதிர்ந்த விதைகள் குளத்தின் துணையோடு முளைக்கத் தெடங்கின. இப்போது மரத்தைச் சுற்றிலும் நிறைய மரக்கன்றுகள். அவைகள் தாங்கள் தாய் மரத்தின் கதையை கேட்டுக்கொண்டேயிருக்கின்றன.


(முற்றும்)

## உண்மைச் செய் நீ!

நோய் நொடியின்றி
நூறாண்டு வாழ்ந்திட - நீ
பாய் படுக்கையிலே
படராமல் வாழ்ந்திட - நீ
தாய் தந்தையரை
தாங்கியே காத்திடு - நீ
ஏய் என்றொருசொல்
ஏசாது பார்த்திடு -
உண்மை
செய்நீ என்ற
சொந்தமெலாம்
புகழ்ந்திடவே!

சுடர் ஒளி


சிறுவர் சுடர்



மழலைகளே...!

வர்ணங்களால் மெருகூட்டுங்கள்

## யானை



யானை பாலூட்டி வகையைச் சேர்ந்த ஒரு தாவர உண்ணி (இலையுண்ணி) விலங்காகும். இது நிலத்தில் வாழும் விலங்குகள் யாவற்றினும் மிகப் பெரியதாகும். மிக நீண்ட நாள்கள் வாழக்கூடியதும் ஆகும் ( 70 ஆண்டுகள்). மனிதர்கள் தவிர்ந்த மற்றைய விலங்குகளில் விலங்குகளில் இதுவே அதிக நாட்கள் வாழும் தரை வாழ் விலங்கு ஆகும். யானைகள் மிகவும் வலிமையானவை. வேட்டை விலங்குகளும் காட்டுயிர்களின் உணவுப் படிநிலையில் உயர்நிலையிலுள்ளவைகளுமான சிங்கம் (அரிமா), புலி முதலியனவும் நெருங்க முடியாத வலிமை கொண்டவை. சில்சமயங்களில் சிங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து, தனியாக வர நேரிடும் களைத்த அல்லது இளைத்த யானையைக் கொல்லும். ஆனால் இந்தவகை நிகழ்வுகள் மிக மிக குறைவே. யானைகளை எந்த விலங்கும் வேட்டையாடு வதில்லை (மனிதனைத்தவிர).

யானைகளில் மூன்று சிற்றினங்கள் இன்று உலகில் எஞ்சியுள்ளன. அவை ஆபிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆபிரிக்கக் காட்டு யானைகள், மற்றும் ஆசிய யானைகள் ஆகும். இவைகளுக்கு இடையே சிறப்பான வேறுபாடுகள் உண்டு. பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ 70 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

ஆண் யானைக்கு களிறு என்று பெயர். பெண் யானைக்கு பிடி என்று பெயர். யானையின் குட்டியைக் கன்று என்றோ குட்டியானை என்றோ சொல்வர். யானை உரக்க எழுப்பும் ஒலியை பிளிறுதல் என்பர்.

## படித்துப் பாருங்கள்

- யானையின் மூக்கு துதிக்கைதான்.
- இந்தியாவின் உணவகம் என்பது பஞ்சாப் மாநிலம்
- சூரியனின் மகள் என்று அழைக்கப்படுவது பருத்தி.
- பெற்றோல் தீப்பற்றி எரியும்போது நீர் ஊற்றக் கூடாது.
- கண், காது இல்லாத உயிரினம் மண்புழு.
- நம உடலில் சராசரி 5 லீற்றர் இரத்தம் ஓடுகிறது.
- நம் உடம்பின் உள் உறுப்புகளுக்கு ஓய்வே கிடையாது.
- நத்தை ஒரு மணிநேரத்தில 13 அடிகள் நகரும்
- பூமி உருண்டையானது என்றுமுதலில் சொன்னவர் கலி லியோ
- உலகில் முதலில் கோப்பி பயிரிட்ட நாடு அபிசீரியா
- புகழ்பெற்ற கிரம்லின் மாளிகை ரஷ்யாவில் உள்ளது
- சனி கிரகத்திற்கு 20 துணைக் கோள்கள் உள்ளன.
- வியாழன் கிரகத்திற்கு 16 துணைக் கோள் இருக்கின்றன
- புளூட்டோ கிரகத்தின் தூரம் 420 கோடி கி.மீ.
- கதிரவனின் விட்டம் 13,92,000 கி.மீ.
- உலகிலேயே அதிக வருமானம் பெறும் நாடு அமெரிக்கா



**அப்பா:-** ஏண்டா, கணக்குல பத்து புள்ளிகள் எடுத்தனீ?

**மணி:** போனமுறை கணக்குல 25 புள்ளிகள் எடுத்ததுக்கு நீங்கதான் இன்னும் 10 புள்ளிகள் எடுத்தா பாஸ் ஆகிடுவாய் என்று சொன்னீங்க. அதனால்தான் 1 0 புள்ளிகள் எடுத்தேன்.

## கண்டுபிடியுங்கள்

இந்த இரு படங்களுக்குமிடையே 04 வித்தியாசங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## தாடி

அவள் சிரிப்பில்
இடி மறைந்து ,
அவள் விழியில்
மின்னல் மறைத்து ,
அவள் பார்வை
மழை பொழியாமல்,
என் முகத்தில் வளரும்,
வறண்டு போன
தாவரம் தான் என்னவோ
இந்தத் தாடி .!!!

-கலை, யாழ்ப்பாணம்



## இன்றைய தாய்

குழந்தைகள் தின
நிகழ்ச்சிக்கு
தலைமை தாங்கச்
சென்றாள்
தன் குழந்தைக்குச்
சோறு ஊட்டாமலே!

-செல்வன், கிசுவமடு.

## நிழலாகிய என் வாழ்வு

பத்துப் பேருக்கு முன்னாலே
பத்தி வைத்த காதல் மோகம்
பித்தம் கொள்ள வைத்ததடி
சித்தம் கலங்கிப் போகிறேன்

சத்தியமாகச் சொல்கிறேன்
உன்னைத் தவிர எவரும்
நெஞ்சுக்குள்ளே இன்றில்லை
என்றுமே உனைத் தவிர
எவளுக்கும் என்னிடத்தில்
இடமில்லை

உரம் போட்டு
வளர்த்த காதலை
உலையில் அழித்துச்
சாய்த்தாயே

லூசு என்று எனை
நூறு முறை ஏசுவாயே
உன்மேல் பைத்தியம் என்று
புரியாமல் போனாயே

கண்ணதாசன் மது குடித்தான்
நினைவுகளை மறந்து கொண்டான்
உன் நினைவுகளை குடித்தமையால்
நிழலாகியது என் வாழ்வு

வெள்ளிச் செயின் போட்டு
வீதியிலே நீ போவாய்
வெட்டுண்ட என் மனதை
சரிப்படுத்தாமல் போனாயே

வெள்ளாடையோடு நான்
பதுங்கியிருந்த காலங்களில்
பொல்லாத காதலை
வளர்த்து விட்டுப் போனாயே

மனித மனங்க்ள்
மரணிப்பதில்லை
தரணியிலே யாரோ
சொன்னார்
உன் நினைவுகளுடன்
வாழ்வதால்
எனக்கும் கூட
மரணமில்லை

-வே.வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.



## நண்பன்


எவ்வளவு வருஷமாச்சுடா பாத்து !!!
என சிலிர்ப்புடன்
பெயர் சொல்லி அழைக்கும்
நண்பனுடன் பேசுகையில்
பயமாய் இருக்கிறது
எம் பெயர் ஞாபகமிருக்கா
என கேட்டு விடுவானோ ?

-நாதன், கிளிநொச்சி

## உடைந்து போன காதல்

உள்ளம் என்பது
உடைந்து போகும் போது
உதிரம் உறைகிறது
உடைந்து போன
உள்ளத்திலும்
உன்னையே
தேடினேன்
ஆனால்
உரிக்க உரிக்க
ஒன்றும் இல்லாமல்
போகும்
வெங்காயம் ஆனது
என் காதல்
கண்ணீருடன் நான்
மட்டும் தனிமையில்

-வைதேகி, காரைநகர்





## நிலவு

ஏய் நிலவே!
உன்னைத் தினம்
நான் கண்விழித்து
ரசிப்பதை நீ
அழகாக
இருக்கின்றாய்
என்றல்ல
என்னவனின் சாயல்
உன்னில்
தெரிவதால்

-யோ.யாழ்.பரந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லைக்காவும் காகிதப் புரட்சியாளர்களும்

-ஞானி

லைக்கா பிரச்சினை மிக எளிமையானது. எதிரியை விடத் துரோகியையே அதிகம் எதிர்க்க வேண்டும் என்ற கோட்பாட்டிலானது.

லைக்கா, யுத்தம் முடியும் வரை விடுதலைப்புலிகளின் சார்பான அமைப்பாக இருந்துவந்தது. காற்று திசை மாறுவதற்கேற்ப கட்சிமாறியவற்றில் அதுவும் ஒன்று. இந்தத் துரோகத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத லைக்காவின் முன்னாள் கூட்டாளிகள் இப்போது கடுமையாக அதை எதிர்க்கிறார்கள். அவ்வளவுதான். மற்றபடி ராஜபக்ஷ அரசுடன் உறவு வைத்திருப் போரையெல்லாம் எதிர்ப்பது என்பது பாவனைதான்.

அப்படி எதிர்ப்பதானால், முதலில் மோடி, மோடியின் அமைச்சர்கள் யாருமே தமிழ்நாட்டுக்குள் நுழையக் கூடாது என்று கறுப்புக் கொடி காட்டியிருக்க வேண்டும்.

தினசரி, சென்னையிலிருந்தும் திருச்சியிலிருந்தும் கொழும்புக்குச் செல்லும் விமானங்களில் இலங்கையுடன் வணிக உறவு வைத்திருக்கும் தமிழர்களே அதிகம் போய் வருகிறார் கள். அந்த விமான சேவைகள் ஏன் தடுக்கப் படவில்லை?

ஐரோப்பாவில் புலிகளின் பழைய, இன்றைய ஆதரவு சக்திகளுக்குள்ளே நடக்கும் போராட்டத்தின் வெளிப் பாடுதான் லைக்கா பிரச்சினை.

எப்போதும் சினிமாக்காரர்களும் சினிமா தியேட்டரும்தான் எதிர்க்க எளிமையான எதிரிகள்.

லைக்காவை எதிர்த்து தியேட்டரில் பெற்றோல் குண்டு வீசிக் கொண்டிருந்த அதே நாளில் டெல்லியில் தன் அழைப்பின் பேரில் இந்தியாவுக்கு வந்திருக்கும் கோத்தபாய ராஜபக்ஷவுடன் அருண் ஜேட்லி இராணுவ ஒத்து ழைப்பு பற்றி விவாதம் நடத்தினார்.

விவரங்களை நிருபர்களிடம் வெளியிட மறுத்துவிட்டார்.

அடுத்த முறை அருண் ஜேட்லியோ மோடியோ தமிழ்நாட்டுக்கு வரக் கூடாது என்று தடுக்க முடியுமா? மீனம்பாக்கத்திலிருந்தும் திருச்சியிலிருந்தும் தினசரி கொழும்புக்குச் சென்று வரும் விமானத்தைப் பறக்க விடாமல் தடுக்க முடியுமா?

இலங்கைத் தமிழர்களின் அசல் பிரச்சினைகளைத் தீர்க்க சரியான வழிகளைத் தேட இயலாமல், நிழல்களைப் பூதங்களாகக் காட்டிப் போராடும் அபத்தம்தான் நடந்துகொண்டிருக்கிறது. இது தமக்கான சுயவிளம்பரம் தேடும் முயற்சிக்கு தமிழ்த்தேசியம் என்ற முலாம் பூசிய நாடகம். உண்மையில் லைக்காவை விடவும் இத்தகைய சுயநலமிகள்தான் தமிழினத்துக்கு எதிரானாவர்கள். ஏனெனில் லைக்கா வெளிப்படையாகவே வியாபாரம் செய்யும் நிறுவனம். இவர்களோ தமிழினத்தின் மானத்தை தாமே காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு தமிழை விபசாரத்துக்குள் தள்ளும் வேடதாரிகள். அவதானம், வேடதாரிகள் எங்கும் இருக்கிறார்கள்.



## படுகொலை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலிடம் அதற்குப் போதுமான தொழில்நுட்பமும் சக்தியும் உள்ளது. ஆனால் அவர்கள் வலுவற்ற பெண்களையும், குழந்தைகளையும் பொதுமக்களையுமே கொன்று குவிக் கிறார்கள். அவர்களுக்கு எதிராக இனப் படுகொலையை அரங்கேற்றுகிறார்கள். ஹமாஸ் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க பொதுசனங்களை முதலீடு ஆக்குகிறார்கள். அவர்களுக்கு, பலஸ்தீனம் தொடர்ந்து துன்பத்தில் கிடந்துழல வேண்டும்.

காஸா முழுவதும், அச்சுறுத்தலும், கொலையும், படுகொலையுமான நூற்றுக்கணக்கான கதைகள் இருக் கின்றன. நான் அரசியல் பேசவில்லை. தேவையுமில்லை. என்னுடைய கவன மெல்லாம், ஒவ்வொருநாளும் கொல்லப் பட்டுக்கொண்டிருக்கிற மனிதர்களைக் குறித்ததே. காஸா நிலத்துண்டுக்குள் அடைபட்டு சொல்லொணாத் துயரங்களுக்கு முகம்கொடுக்கும் மனிதர்களைப் பற்றியதே.

ஒருவேளை, பலஸ்தீனப் போராளிகளிடம், உயர் இராணுவ தொழில் நுட்பம் வாய்த்து, பலஸ்தீனர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற படுகொலையின் பங்குதாரர்களான ஒவ்வொரு இஸ்ரேலிய வீரனையும், இராணுவ அதிகாரியையும், அரசியல்வாதிகளையும் அவர்களின் குடும்பத்தினரையும் தண்டிப்பதற்கு முடிவெடுத்தால் என்ன ஆகும்? என்று கற்பனை செய்கிறேன். அது போன்றவொரு செயலைச் செய்தால் என் யூகத்தின்படி இஸ்ரேல் என்றொருநாடு பின்னர் இருக்காது.

யூத அதி தீவிர வலதுசாரிக் கட்சி யொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அய்லெட் ஷேக்ட் என்ற பெண்மணி தெரிவித்த கருத்துப்பற்றிய ஒரு கட்டுரையை வாசித்தேன். அதிதீவிர வலதுசாரியென்றால் நெத்தன்யாஹூவுக்கும் வலது. அய்லெட் ஷேக்ட் தன் பேஸ்புக் பக்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

ஒவ்வொரு தீவிரவாதியின் பின்னாலும் பலநூறு ஆண்களும் பெண்களுமுள்ளார்கள். அவர்கள் இல்லாமல் தீவிரவாதத்தை முன்னெடுக்க முடியாது. அவர்கள் எல்லோருமே எதிரிகள். ஆகையால் அவர்கள் சாவை அவர்களே தேடிக்கொள்வார்கள். தம் பிள்ளைகளை பூக்களோடும் முத்தங்களோடும் நரகத்துக்கு அனுப்பிவைத்த எதிரிப்படையின் தாய்மாரையும் இப்பொழுது சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்களும் தங்கள் மகன்களைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டும். இதைவிட நீதி எதுவும் இருக்கமுடியாது

மனிதத் தன்மையற்ற வார்த்தைகள். அப்படியானால் நாங்களும் சகல இஸ்ரேல் மக்களையும் எதிரிகளாகக் கருதவேண்டும். ஏனென்றால் 66 ஆண்டுகளுக்கு முன்னால் 1948இல் பலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்பட்டு அவர்கள் வாழ்ந்த வீடுகளில் இருந்து அகதி முகாம்களுக்கும், புலம்பெயர்ந்தவர்களாக உலகம் முழுவதற்கும் விரட்டப் பட்ட போதும், சர்வதேச சட்டங்களுக்கு முரணாக, அவர்கள் தாயகம் திரும்புவது தடுக்கப்பட்டது. பலஸ்தீனத்தில் வாழ்ந்த பூர்வீக மக்களை வெளியேற்றியதன் ஊடாக இஸ்ரேல் என்றொரு நாடு உருவாக்கப்பட்டது. வரலாற்று வேர்களைக் காரணம் சொல்லி நில அபகரிப்புக் கோரப்பட்டது.

ஆனாலும் ஒன்றை நான் உறுதியாகச் சொல்கிறேன். படை நடவடிக்கைகளால் பெயர்க்கப் பட்டபோதும், இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட போதும், மிருகத்தனமாக வதைக்கப்பட்டபோதும், முற்றுகைக்குள் எம்மை ஒதுக்கித் தள்ளியபோதும் பலஸ்தீனர்கள் நாடற்றவர்கள் அல்ல. இந்தத்துயரின் முடிவாக என்றோ ஒருநாள், நாம் நம் நிலத்துக்குத் திரும்புவோம்.

தொலைவிலிருந்து இயக்கும் ஆளில்லாத சிறிய விமானங்கள் சிலவற்றை பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலின் உள்ளே அதிக தூரங்களுக்குச் செலுத்தித் தாக்குதல் நடத்தினார்கள் என்ற செய்தியோடு இந்தநாள் கழிகிறது. இந்தநாளின் குறிப்பிடத்தக்க செய்தியும் இதுவே. ஆம், நம்பிக்கை ஒன்றுதான், மிக அடிப்படையான வளத்தோடு, ஒன்றைக் [illegible]பிடிக்கவும், அதை [illegible], அதைக்கொண்டு எதிர்க்கவும் உங்களை ஊக்குவிக்கும். முழு அரபு உலகமும் செய்யாத ஒன்றை இவர்கள் செய்து முடித்துள்ளார்கள்.

சாத்தியமான மோதல் தவிர்ப்பு ஒன்றைப் பற்றியும் செய்திகளும் உலாவுகின்றன. இஸ்ரேல் காஸா எல்லைப் பகுதியில் மோதல் தவிர்ப்பு ஒன்றை எகிப்து பரிந்துரை செய்துள்ளது. இதன்படி நாளை காலையிலிருந்து இஸ்ரேல் தன்னுடைய அனைத்து வான்தாக்குதல்களையும், கடல், தரைத் தாக்குதல்களையும் நிறுத்தவேண்டும். தரை வழிப் படையெடுப்பை மேற்கொள்வதில்லையென்றும் பொதுமக்களைத் தாக்குவதில்லையென்றும் உறுதியளிக்கவேண்டும். அதே நேரத்தில் சகல பலஸ்தீனப் பிரிவுகளும் தமது தாக்குதல்களை நிறுத்த வேண்டும். நிரந்தர யுத்த நிறுத்தத்துக்கு ஏதுவாக காஸா இஸ்ரேல் எல்லைகள் திறக்கப்பட்டு பொருளாதாரத் தடை தளர்த்தப்பட வேண்டும். பொதுமக்களின் போக்குவரவு அனுமதிக்கப் படவேண்டும்.

இது நல்ல செய்தி. எகிப்தின் பரிந்துரைக்குச் சாதகமான பதில்களை எதிர்பார்த்திருக்கின்றேன். ஒருவேளை இது நடந்துவிட்டால், என்னுடைய பிறந்த நாளான நாளை, நான் மட்டுமல்லாது லட்சக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியில் திளைக்கப் போகின்ற ஒரு நாளாக அமையும் என்று நம்புகிறேன்.

(யுத்தத்தின் ஏழாவது நாள் முடிவடைந்தது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரைதேடும் இணைய வலை

■ சுடுதண்ணி

-24

சாபுவிடம் தொடர்பு கொண்டு தான் இன்னும் பெரிதாக எதிர்பார்ப்பதாகவும், அவற்றினை விக்கிலீக்ஸ் மூலம் வெளியிடுவதற்கு ஆவனசெய்வதாகவும் சிகர்துர் சொல்ல, சாபுவோ முதலில் சிகர்துருக்கு விக்கிலீக்ஸில் இருக்கும் தொடர்பினை உறுதிப்படுத்தாமல் எதுவும் செய்யமுடியாது என்று மறுத்தான். அதன் பிறகு நேரடியாக ஜூலியனுடன் பேசிய பிறகே சாபு உதவி செய்யச் சம்மதித் தாக சிகர்துர் சொன்னாலும் என்ன நடந்தது என்பது சாபுவுக்கும், ஜூலியனுக்குமே வெளிச்சம். அதற்குப் பிறகு வரிசையாக நடந்தேறின அதிரடியான சம்பவங்கள்.

ஹக்கிங் கில்லாடியான சாபுவின் திறமை அனானிமஸ் உலகில் மிகப்பிரபலம். லல்செக் (lulzec) எனப்படும் ஹக்கிங் குழுவின் நிறுவுநர்களின் ஒருவன் தான் சாபு. லல்செக்கின் அதிரடி அட்டகாசங்கள் மிகப்பிரசித்தம். இவர்களின் தாக்குதலுக்கு அமெரிக்காவின் சி.ஐ.ஏ. இணையத் தளம் கூடத் தப்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சாபுவின் திறமைகளின் வீரியம் சிகர்துர் கேட்டு முடிக்கும் முன்பே தகவல்களை கொட்டும் வேகத்தில் தெரிந்தது. கேட்ட கோப்புகள் எந்த நிறுவனம் அல்லது அமைப்புக்குச் சொந்தமாக இருந்தாலும் உடனே அவர்களின் வலையமைப்புக்குள் புகுந்து சுருட்டி அள்ளிவந்து கொட்டுவதில் சாபு கில்லாடி. அமெரிக்கப் பாதுகாப்பு மற்றும் உளவு அமைப்புகளுடன் சேர்ந்து இயங்கும் தனியார் நிறுவனங்களான ஸ்ட்ரட்போர் (stratfor), லொக்ஹீட் மார்ட்டின் (lockheed martin) உள்ளிட்ட நிறுவனங்களின் மின்னஞ்சல்களின் தொகுப்புகள் சாபுவின் மூலம் சிகர்துருக்குக் கையளிக்கப்பட்டது. இவை பின்னாளில் விக்கிலீக்ஸ் மூலம் வெளிவந்து பெரும் அதிர்வலைகளை உண்டாக்கின. அமெரிக்கப் பாதுகாப்பு மற்றும் உளவு அமைப்புகள் செயற்படும் முறைகள், முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்ட விதங்கள் என அனைத்தும் சந்திசிரித்தன.

பாகிஸ்தானில் சுட்டுக்கொல்லப்பட்ட பின்லேடனின் உடலுக்கு உண்மையில் என்ன நடந்தது போன்ற தகவல்கள் இந்தமின்னஞ்சல்கள் மூலமே வெளிவந்தன.

ஆரம்பத்தில் கிளுகிளுப்பாக இருந்தாலும், சாபுவின் மூலம் தகவல்கள் மளமளவென கொட்டத் தொடங்கியதும், அந்தத்தகவல்களின் வீரியம் சிகரிதுரின் நிலைமையை ஷகீலா படம் பார்த்த வயசுப்பையனைப் போலாக்கியது. சாமத்தில் கெட்ட கனவுகள் வர ஆரம்பித்தன. நள்ளிரவில் எப்.பி.ஐ கதவை உடைத்துக் கொண்டு தன்னை அள்ளிப் போவது போலான பீதியை உண்டாக்கும் பயங்கள் தோன்ற ஆரம்பித்தன சிகர்துருக்கு. உலகமெங்கும் பரவியிருக்கும் கௌக்கர், நோசிஸ், மற்றும் லல்செக் போன்ற சிறு குழுக்கள் சேர்ந்தது தான் அனானிமஸ் என்பதும் அவர்களின் சகவாசம் எத்தகைய சிக்கலில் கொண்டு விடும் என்பது சிகர்துருக்கு மெல்ல மெல்லப் புரிய ஆரம்பித்த போது தான் எந்த அளவுக்கு எதில் புதைந்திருக்கிறோம் என்பது அவனுக்குத் தெரிந்தது. அது போக மற்றுமொரு விஷயமும் சிகர்துர் மனதை அரித்துக் கொண்டிருந்தது.


அது கொலட்ரல் மோர்டார் காணொலி மற்றும் தூதரக மின்னஞ்சல்களை விக்கிலீக்ஸிக்கு அளித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு வழக்கினைச் சந்தித்து வருபவர் பிரட்லி மேனிங். இவரின் வழக்கினை நடத்துவதற்காக ஆர்வலர்களால் ஆரம்பிக்கப்பட்ட பிரட்லி மேனிங் பாதுகாப்பு இயக்கத்துக்குப் பெருந்தொகை ஒன்றை நன்கொடையாகத் தருவதாக வாக்களித்திருந்த ஜூலியன் அதனை நிறைவேற்றவில்லை. அது குறித்த மன வருத்தமும் சிகர்துருக்கு ஜூலியனின் மீதிருந்த மதிப்பினை, நம்பகத்தன்மையைச் சிதைத்திருந்தது.

ஒகஸ்ட் 23, 2011 அன்று அதிகாலை சுமார் மூன்று மணி. தூக்கம் வராமல் மன அழுத்தத்தில் தவித்த சிகர்துர் ஒரு முடிவுக்கு வந்து உங்களைச் சந்திக்க வேண்டும் என்ற தகவலுடன் மின்னஞ்சல் ஒன்றை ஐஸ்லாந்து தலைநகர் ரெஜவிக்கில் (Reykjavik) உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அனுப்ப, உடனே வந்து சந்திக்க அழைப்பு வருகிறது சிகர்துருக்கு.

காலம் எத்தனையோ புதிர்களை நமக்குப் போட்டுக் கொண்டே இருக்கிறது. விக்கிலீக்ஸ் மற்றும் அனானிமஸ், அவர்களுக்குக்கிடையே உள்ள தொடர்புகள், தகவல் பறிமாற்றங்கள், விக்கிலீக்ஸ் விவாதத்தளங்களில் பங்கு பெற்றவர்கள் என்று சகல விவரங்களும் தெரிந்த, ஜூலியனிடம் நெருங்கிப் பழகிய சிகர்துர் அமெரிக்கத் தூதரகத்துக்குச் சென்று வாக்குமூலமளிக்க செல்லத் தயாராகிக் கொண்டிருந்ததும் அத்தகைய புதிர்களில் ஒன்று.

அமெரிக்கத் தூதரக வளாகத்தில் அமெரிக்க அதிகாரிகள் காட்டிய அனைத்து ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டு அதிகாரப்பூர்வ ஆள்காட்டியாக அவதாரமெடுத்திருந்த சிகர்துருக்கு கொடுக்கப்பட்ட வேலை, தொடர்ந்து அமெரிக்க உளவு அமைப்புகளுடன் தொடர்பில் இருப்பதும், விக்கிலீக்ஸ், அனானிமஸ் இடையிலான தொடர்புகள், அடுத்தடுத்து வரப்போகும் விக்கிலீக்ஸ் வெளியீடுகள் குறித்த தகவல்களை அனுப்புவதும் தான்.

வந்த சுவடே தெரியாமல் சிகர்துர் கட்டுக்குலையாமல் வீட்டுக்கு அனுப்பி வைக்கப் பட்டார். அன்று முதல் எப்.பி.ஐ உடன் தினமும் நேரடித் தொடர்பில் இருந்தார் சிகர்துர். விக்கிலீக்ஸ் தளங்களில் நடைபெறும் விவாதங்கள், வெளியிடத்தயாராகும் கோப்புகள், சாபு மூலம் கொட்டும் தகவல்கள் அனைத்தும் சிகர்துர் மூலம் நேரலையில் அமெரிக்கா கண்டுகளித்துக் கொண்டிருந்தது.



சாபுவின் கைங்கரியத்தில் கிடைத்த ஸ்ட்ரட்போர் தகவல்களையே தாளிக்க முடியாமல் இருந்த சிகர்துருக்கு சாபுவிடம் இருந்து சிரிய அரசாங்கத்தின் மின்னஞ்சல் வழங்கியிலிருந்து சுருட்டப்பட்ட லட்சக்கணக்கான மின்னஞ்சல்கள் வந்து சேர்ந்தன. பின்னாளில் சிரியா கோப்புகள் என்ற பெயரில் விக்கிலீக்ஸ் மூலம் அவை வெளியிடப்பட்டு உள்நாட்டு கலவரம் நடந்த அந்த நாள்களில் மேற்கத்திய நாடுகளும், அந்நநாட்டு நிறுவனங்களும் போட்ட இரட்டை வேடங்கள் வெளிச்சத்துக்கு வந்து பரபரப்பை ஏற்படுத்தின. இவை அனைத்தும் வெளிவருவதற்கு முன்பே அமெரிக்காவுக்கு சிகர்துர் மூலம் தகவல் சொல்லப்பட்டது. இப்படி அமெரிக்காவின் ஜேம்ஸ்பொண்டாக செயற்பட்டுக் கொண்டிருந்த சிகர்துருக்கு சங்கு ஒரு தொலைபேசி வடிவில் வந்தது.

விக்கிலீக்ஸின் ஊடகத் தொடர்பாளரும், சிகர்துரை ஜூலியனுக்கு அறிமுகம் செய்து வைத்தவருமான கிறிஸ்டைனிடமிருந்து வந்த அழைப்பின் மூலம் சிகர்துர் விக்கிலீக்ஸ் பணம் ஐம்பதாயிரம் அமெரிக்கடொலரைக் கையாடியதாகக் குற்றப்பத்திரிக்கை வாசிக்கப்பட்டது. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படப் போவதாக சொல்ல, [illegible] இனி இங்கு இடமில்லை என்ற முடிவுக்கு வந்து விக்கிலீக்ஸின் தொடர்பு எல்லைக்கு வெளியே சிகர்துர் என்ற சிட்டுக்குருவி சர்ரென்று பறந்தது.

(வலை விரியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

29.10.2014 ~04.11.2014

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

தம்பி, தங்கையின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும். அறிமுகம் இல்லவாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தரவேண்டாம். புத்திரர் முன்னேற்றம் பெறுகிற வகையில், புதிய வழியில் நடைபோடுவர். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர் கூடுதல் அக்கறையுடன் பணிபுரிய வேண்டும். பெண்கள் குடும்ப விவகாரம் பிறரிடம் பேச வேண்டாம். மாணவர்கள், ஆசிரியரின் வழிகாட்டுதல் தவறாமல் பின்பற்றவும்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

பணவரவும், புகழும் திருப்திகர அளவில் கிடைக்கும். அதிக விலையுள்ள பொருள் கவனமுடன் பாதுகாக்கவும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களின் விமர்சனத்தை எளிதாக கருதவும். தொழில், வியாபாரம் செழித்து, பணவரவு கூடும். பணியாளர் திறம்பட பணிபுரிந்து கூடுதல் சன்மானம் பெறுவர். பெண்கள், தமக்கு தொடர்பு இல்லாத விவகாரங்களில் பேசவேண்டாம். மாணவர்கள் ஞாபகத்திறன் வளர்ந்து, படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

குடும்பத்தின் தேவையை, தாராள பணச்செலவில் வாங்கித் தருவீர்கள். மங்கல நிகழ்வு இஷ்ட தெய்வ அருளால் உருவாகும். புத்திரரின் செயல் பெருமை தேடித்தரும். எதிர்ப்பாளரிடம் விலகுவதால், மன அமைதி பாதுகாக்கலாம். பணியாளர் உத்வேகத்துடன் பணிபுரிந்து அதிக நன்மை பெறுவர். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேற்றம் காண்பர்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

அரசு பணியில் உள்ளவர்களிடம் வீண் விவாதம் பேசக்கூடாது. இளைய சகோதர வகையில், மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் சந்தோஷ மனதுடன் செயல்பட்டு புதிய சாதனை நிகழ்த்துவர். எதிரி சொந்த சிரமங்களால் விலகிப்போவார். இல்லறத்துணை உங்களின் செல்வாக்கு சமூகத்தில் பெருக உதவுவார். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

அரும் பெரும் நற்செயலால், சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். பணவரவு அதிகம் பெற, புதிய வாய்ப்பு கிடைக்கும். நண்பருடன், வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரர், தம் தேவை நிறைவேற தாமதம் ஆவதால், உங்களிடம் வருத்தம் கொள்வர். எதிரியால் உருவாகிற இடர் பலமிழந்து போகும்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

தம்பி, தங்கையின் கஷ்டம் தீர உதவுவீர்கள். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும். புத்திரர் சுற்றுலா சென்று வருவதில் ஆர்வம் கொள்வர். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். இல்லறத்துணை உங்களின் நலனில் கூடுதல் அக்கறை கொள்வார். தொழிலில் இடையூறு சரிசெய்வதால், உற்பத்தி, விற்பனை சீராகும். பணயாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து நடப்பது நன்மை பெற உதவும்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

இடையூறு விலகி வெற்றியின் பாதை தெளிவாக புலப்படும். உபரி பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். தம்பி, தங்கை ஆதரவாக நடந்து கொள்வர். வீடு, வாகன பாதுகாப்பில் கூடுதல் கண்காணிப்பு அவசியம். புத்திரர் வாழ்வின் அர்த்தம் உணர்ந்து கொள்ள நல்ல அறிவுரை சொல்வீர்கள். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற நல்லோரின் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நீண்ட தூர வாகனப் பயணத்தில், தகுந்த ஓய்வு பின்பற்ற வேண்டும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் உணர்ந்து, சில ஆலோசனை சொல்வீர்கள். பிணி தொந்தரவு விலகி, உடல்நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணை, உங்களின் அருமை, பெருமை பற்றி உறவினர்களிடம் சொல்வார். தொழில், வியாபாரம் செழித்து வளர அனுகூல சூழ்நிலை உருவாகும். பணியாளர் தொழில்நுட்ப அறிவு வளர்த்துக் கொள்வீர்கள்

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி வளரும். பணவரவு திருப்திகரமாகும். தம்பி, தங்கைக்கு மங்கல நிகழ்ச்சி நடத்தலாம். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரரின் செயல் வருத்தம் தரும். எதிர்ப்பான சூழ்நிலையை பூர்வ புண்ணிய பலன் எளிதாக மாற்றி விடும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற அரசு உதவி கிடைக்கும்.

**மகரம்**

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

வாழ்வில் கிடைக்கிற வசதிகளை அளவுடன் பயன்படுத்துவீர்கள். பூர்வ சொத்து பராமரிப்பில், நம்பகமானவர்களை பணியமர்த்துவது நல்லது. புத்திரர் சில விஷயங்களில் விரக்தி அடைவார். உங்களின் கனிவான பேச்சு சீராக்கும். இல்லறத்துணையின் கருத்து வியப்பு தரும். தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் கவனமுடன் பாதுகாக்க வேண்டும். இயந்திரப் பிரிவு பணியாளர் பாதுகாப்பில் உரிய கவனம் பின்பற்ற வேண்டும்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

வாகன பயணம் இனிதாக அமையும். புத்திரர் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். சொத்துகளில் கூடுதல் பணவரவு கிடைக்கும். சீரான ஓய்வு, உடல்நல ஆரோக்கியம் பாதுகாக்கும். இல்லறத்துணை ஒற்றுமை குணத்துடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகைப் பயன் வந்து சேரும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். இல்லறத்துணை, உங்கள் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழில் வியாபாரத்தில் வரு[illegible] போட்டியை சரி செய்ய, சமயோசித நடவடிக்கை பின்பற்றுவீர்கள். பணியாளர், உத்வேகமுடன் செயல்படுவீர்கள். பெண்கள், கணவரின் அன்பு, கூடுதல் பணவரவு கிடைத்து, சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள், பெற்றோரின் அனுமதி இன்றி, நீண்ட தூர பயணம் செல்லக் கூடாது.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 58

திருமணமான இத்தனை ஆண்டுகளிலும், மிகவும் சோதனையான இடர்படிந்த காலங்களில் கூட ,நிலையான அன்பையும் இனிமையான குடும்ப வாழ்வையும் பிரபாகரனுக்கு மதி வழங்கியிருக்கிறார். எனினும் திருமண வாழ்வு என்பது மதிக்கு ஒரு மலர்ப் படுக்கையாக அமையவில்லை. இயல்பாகவே அமைதியும் பொறுமையும் கொண்ட மதி எத்தனையோ தடவைகளில் மிகவும் நெருக்கடியான துயரச் சூழல்களை எதிர் கொண்டு சமாளிக்க வேண்டி இருந்தது. பிரபாகரனது போராட்டப் பணிகள் காரணமாக தம்பதிகள் இருவருக்கும் மத்தியில் நீண்ட காலப் பிரிவுகளும் ஏற்பட்டதுண்டு. இதனால் திருமணமான புதிதில்,தனிமைத் துயரை அவ்வப்போது அனுபவிக்கும் கொடுமைக்கு மதி உள்ளானார். வடகிழக்கை இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருந்த காலத்தில் மதி பெரும் மனத் துயரங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையே போர் தொடங்கி யதும் , நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் தமது பிள்ளை களுடன் அகதியாகத் தஞ்சமடைந்தவர்களில் மதியும் ஒருவர். அதன் பின்னர் மதி தமது பெற்றோரிடம் பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு முல்லைத் தீவு மாவட்ட மணலாற்றுப் பகுதியில் அலம்பல்



காடுகளுக்குள் தனது கணவருடன் சேர்ந்து கொண்டார். ஒரு புறம் அவர்களுடைய அலம்பல் முகாம் மீது இடையறாது நடந்த பீரங்கி ஷெல் அடி, தத்தி அடி வைக்கும் மழலைப் பாலகரை விட்டுப்பிரிந்த ஒரு இளம் தாயின் பிரிவுத் துயர். இனி, இந்திய இராணுவத்துக் கெதிரான மோதலில், நெஞ்சார நேசித்த தம்பியை சாகக் கொடுத்த இழப்புத் துயர். இவை எல்லாம் மதியை வெகுவாகப் பாதித்தன. பின்னர் பிள்ளைகளோடு சேர்க்கப்பட்ட மதி , வெளிநாடு சென்று சுவீடனில் வாழ்ந்தார். சுவீடனில் இரண்டு பிள்ளைகளுடன் தலைமறைவான வாழ்க்கை. முன்பின் அறிமுகம் இல்லாத ஓர் கலாசாரம்.இடையறாத ஆபத்துக்கு மத்தியில் வாழும் கணவனிடம் இருந்து பிரிவு. ஆதரவு தர நெருங்கிய உறவினர் எவரும் இல்லாது இருந்தமை.இவை எல்லாம் மனச்சஞ்சலத்துக்கும் மனச் சோர்வுக்கும் மதியை உள்ளாக்கின. பிரேமதாசா அரசுடன் விடுதலைப்புலிகள் 1989 இலே பேச்சுவார்த்தையைத் தொடக்கிய போது, இலங்கைக்கு மதி திரும்பிச் செல்வதற்கான ஏற்பாட்டை பாலா செய்தார். இலங்கைக்கு நாம் திரும்பிச் சென்ற ஒரு பயணத்தின் போது மதியும் பிள்ளைகளும் சிங்கப்பூரில் எம்மோடு சேர்ந்து கொண்டார்கள். நாம் கொழும்பு சென்றடைந்ததும் அலம்பில் காட்டுக்கு நாம் செல்வதற்கு உலங்கு வானூர்தி ஒன்றை பிரேமதாசா அரசு ஏற்பாடு செய்து தந்தது. இதனால் 1989 இல் மதி,திரும்பவும் தமது கணவருடன் இணைந்து கொண்டார்.திருமணமான நாளில் இருந்து மதிக்கு ஒரு நிரந்தர வீடும் இல்லை. பாதுகாப்பான குடும்ப வாழ்க்கையும் கிடையாது. இருந்த போதிலும் ஒரு கொரில்லாப் படைத் தலைவரின் மனைவிக்குஉரிய துணிச்சலுடனும், கண்ணியத்துடனும் செயற்பட்டதோடு தமது பிள்ளைகளுக்கும் ஒரு நிலையான, பாதுகாப்பான வாழ்வை வழங்குவதிலும் அயராது பாடுபட்டார்.



(பதிவு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# என்னைப்பற்றிய குறிப்புகள்

-ந.மயூரரூபன்



இதமான எண்ணங்களின் அரவணைப்பில் சுருண்டிருந்தது மனது. உடலது உணர்வுத் துளிகளில் ஒரு விதமான இன்பத்தேறல் துளிகளாகச் சொட்டிக் கொண்டிருந்தன. அவளின் அன்பு பொலியும் முகம் என்னருகே என்னையே பார்த்தபடி....

நான் உணர்வுகளில் சரணடைந்து என்னிலை மறந்து அவள் முகத்தினை நெருங்கினேன்.

ஒளிச்சிதறலுடன் வெடித்துச் சிதறியது காற்று.என் கண்கள் இருளையே கண்டன. ஒளியைப் பார்க்க முனையும் போது சிதறிய உயிரியின் துகள்களில் என் முகங்களே பலவாகத் தெரிந்தன.

நினைவுகளின் அடுக்குகளில் வெடிக்கும் உண்மையின் கனவாகவே இது எனக்குள் சோரமாகிக் கொண்டிருக்கின்து. மெதுவாக கால இழை படிகிற வாழ்க்கையின் அடுக்குகள் எனக்குள் வாழ்வின் இன்பத்தின் வரிகளை ஒளித்துவைத்தன. என்னால் அவற்றினைத் தேடிக்காண முடியவேயில்லை.

எனது காற்று. வெடித்துச் சிதறிய பொழுதினைக் கடந்த போது நான் உயிரினைப் பொதி வைத்து ஓடத் தொடங்கியிருந்தேன். மணல்களில் கால்கள் புதைந்தெழும் ஓட்டத்திலும் காற்றின் வாதையிலும் உயிர் தளம்பிக் கொண்டிருக்கின்றது.

எனது உயிரருகே சாம்பர் மேடுகளின் சூடு மெதுமெதுவாகத் தணிந்து கொண்டேயிருக்க, அந்த சாம்பர் பூத்த வெளிகளைக் கிளறிக் கிளறி மனது கீழிறங்குகிறது. கீழிறங்கும் மனத்தின் மூலைகள் ஒவ்வொன்றிலும் என்னசைவின் படங்கள் அனைத்தும் கறுப்பு வெள்ளையாக தூசி படிந்து போகின்றன. கீழிறங்கும் மனது பல்லாயிரம் சிலுவைகளில் அறையப்பட்ட வலியையே தேடுகின்றது.

உயிர் பொத்தி ஓடுகின்ற பொழுதுகள் உன்னையும் அவனையும் பின் தொடர்ந்து கொண்டிருந்தன. அந்தப் பொழுதுகளின் இடுக்குகளில் நானும் தொங்கிக் கொண்டிருந்தேன். காற்றின் கதறலில் பயந்த பொழுதுகளில் அள்ளுண்ட என் நண்பன் தனது கைகளால் மணல்பறித்து என்னையும் தன்னுடன் அதற்குள் நுழைத்துக் கொண்டான். காற்று அவனின் கதறலை மட்டும் தன்னுடன் இழுத் தோடியது. அந்தக் குழியின் வாசல் திறக்கும் நினைவுகளில் அவனது முகம் மிக நெருக்கமாக தன் கனவுகள் தூர்ந்து போன கண்களால் என்னை அழைத்துச் செல்லும்.

வாழ்க்கையின் வேர்கள் மறைந்திருந்து வேடிக்கை பார்க்க, மனதில் ஆணியடிக்கப்பட்ட வலி தரும் கண்ணீரில் நனைந்து கொள்கின்றது- என் கீழிறங்கும் மனது. இயல்புலகம் இது வெனச் சொன்ன இடம். நான் வெளி வருகின்ற போது பலவீனப் பட்டிருந்து மனதினையும் உடலினையும் உறவுகளின் இயல்பிலும் மாசற்ற அன்பிலும் போக்குவற்கு முனைந்தேன்.

அப்பா நெல் விதைத்த வயல் என்னை அடிக்கடி அழைத்துக் கொள்ளும். அதன் மாற இயல்பின் மடிகள் நீள நடக்கின்ற போதும் வயலின் நுனியிலுள்ள பனங்கூடலில் அமர்ந்து என்னைக் கரைத்த போதும் நெருங்கி நின்று என் வலி நீவித் தடவ காற்றும் தயங்கி ஒதுங்கியது. உடலின் வலு. வடுவாக உறைந்த போதும் மனதின் வலி இன்னமும் இரத்தத்தினை கசியவே வைக்கின்றது. என்னுயிர் வெறுமையினை நான் என்னிலிருந்து தூக்கி வைக்க பிரயத்தனப்படவேயில்லை.

ஒளிச்சிதறலுடன் காற்று இப்போதும் எனக்குள் வெடித்துச் சிதறுகின்றது. என்னைக் கடந்து போகும் காலத்துடன் சேர்ந்து நகரவே முடியவில்லை. காலம் என்னை மட்டும் தனியே விட்டுப் போவதை வேடிக்கை பார்ப்பதற்கே முயற்சிக்கின்றேன்.

அப்பாவும் அம்மாவும் என்னைச் சிறு பிள்ளை போல அவதானத்துடனேயே கவனிக்கிறார்கள். முதிரும் பருவத்திலும் அவர்கள் முன் குழந்தையாகத் தளர் நடையிடுகின்றது என் மனது. வெறும் சேதியாக அவர்கள் என்னைக் கேள்விப்படுவதற்கு பதில் நானாக அவர்களிடம் நான் இருப்பதில் கண்ணீர் வழியும் திருப்தி அவர்களுக்கு.

உலகம் தன்னியல்பில் அசைகின்றது?

நான் அதனைப் புரிந்து கொள்ள முனையவில்லை. நான் என்னைப் பிரித்துப் பார்க்கும் முயற்சியில் இறங்கினேன். என்னிலிருந்து நான் வேறுபட்டுக் கொள்வதற்கும் காலத்தின் வரிகளையும் அது தந்த வலிகளையும் அழித்து விட முடியுமா?

**அப்பாவும் அம்மாவும் என்னைச் சிறு பிள்ள்ள போல அவதானத்துடனேயே கவனிக்கிறார்கள். முதிரும் பருவத்திலும் அவர்கள் முன் குழந்தையாகத் தளர் நடை யிடுகின்றது என் மனது. வெறும் சேதியாய் அவர்கள் என்னைக் கேள்விப் படுவதற்கு பதில் நானாக அவர் களிடம் நான் இருப்பதில் கண்ணீர் வழியும் திருப்தி**

பொழுதுகள் தம்மியல்பை மறந்து விடுகின்றன. அது வெறுமனே அனைத்தையும் சுமந்துச் செல்லும் வண்டியாகவே ஓடிக்கொண்டிருக்கிறது. எழுதிவிடும் வரிகளை அழித்துவிடும் வெறுங்கதையாக ஒருவரின் வாழ்வும் இங்கு இருந்து விடவில்லை. ஒளித்து வைக்கவே முடியும். ஒளித்து வைப்பதற்கான இடத்தினை எங்கு போய் நான் தேடுவது..?ஒரு விடயம் எனக்குப் புரியவேயில்லை. இரவிலா பகலிலா ஒளிப்பது சிறந்தது? எந்தக் காலக் கண்களில் மயக்கம் அதிகம்?

இருளைப்பற்றி நான் பேசுகின்ற பொழுதுகளில் இவனைப்பயம் முற்றாக தின்றுவிட்டது என்கிறார்கள். எனது வலிகளைச் சொல்லி அழுகின்ற போது விளங்காத தத்துவத்துள் சரிந்து விட்டான் என்கிறார்கள்.

இரவிலும் பகலிலும் பார்த்துக்கொண்டேயிருக்கிறார்கள். என்னை ஒரு அடையாளத்துடன் காணவே எல்லோரும் ஆசைப் படுகின்றார்கள். உண்மையில் அடையாளங்களைத் துறக்கும் ஒரு நிலையே எனக்குத் தேவையானது.

என்னிலிருந்து நான் விலகிக் கொள்வதன் தேவை வலுப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. என்னுடன் நான் சேர்ந்திருக்கும் பொழுதுகளில் நான் ஆயுள் பலத்தினை இழந்து விடுவேன் என சாத்திரிகள் கண்களை மூடிய படியே கூறினார்கள். அதற்கான குணாங் குறிகள் பலதினையும் ஊரிலுள்ள குறிசொல்லிகள் அம்மாவிடம் சொல்லி சேர்ந்தழுதனர்.

சாத்திரக் குறிப்புகளும் குறிசொல்லிகளின் அருட்டல்களும் அம்மாவின் கண்ணீருடன் சேர்ந்து என்னை விரட்டிவந்து கொண்டேயிருக்கின்றது.

இங்கு கால இழை படிகின்ற வாழ்க்கையின் அடுக்குகள் அடிக்கடி இழை பிரிந்து என் மூச்சுக் காற்றினை கதறவே செய்விக்கின்றது.

விழிகள் மயங்குகின்ற பொழுதொன்றில் வெறித்திருந்த வெளியொன்றில் நான் நடந்து கொண்டேயிருந்தேன் என்னுடன், எங்கும் வெம்மை ஏறிக் கொண்டிருப்பதை ஓதுங்கியிருந்த ஓரிரண்டு மரங்களும் அசைவற்றுப் பார்த்திருந்தன. நான் நீள நடந்து கொண்டேயிருந்தேன்.

இருள் கனத்துப் படுத்திருந்த அந்த சரிவில் இறங்கி சிறுபற்றைக் கருகில் அமர்ந்து கொண்டேன். வியர்வை ஓடிக்கொண்டேயிருந்தது. நனைந்த சேட்டின் தெறிகளை கழற்றி விட்டுக் கொண்டேன். மூச்சு இரைத்தது. மல்லாக்காகப் படுத்துக் கொண்டேன். வானில் நட்சத் திரங்களும் ஒளித்து விட்டிருந்தன. நேரம் நீண்டு கொண்டேயிருந்தது. சடாரென எழுந்தமர்ந்தேன். வண்டுகள் கதறிக் கொண்டிருந்தன.

சுற்றும் முற்றும் பார்த்தேன். கதறலை நிறுத்திக் கொண்டன. தவளைகள் மட்டும் விட்டுவிட்டுக் குரல் கொடுத்தன. அருகிலுள்ள தாமரைக் குளத்தின் நெடியினை இப்போது உணர முடிந்தது.

சிந்தனைகளை ஒதுக்கி பற்றையின் அடியில் மணலை கைகளால் வாரத் தொடங்கினேன். சாம்பர் பூத்த மணலைக் கிளறி கிளறிக் கைகள் கீழிறங்க மனதும் உடனிறங்குகிறது. கைகள் ஆழத்தைத் தேடியிறங்க மனது மட்டும் பல்லாயிரம் சிலுவைகளில் அறையப்பட்ட வலியைத் தேடுகின்றது. கண்ணீரில் மனது தோய்ந்து கொள்கின்றது. களைத்துப்போய் சற்றே அமர்ந்திருந்தேன். உடல் முழுவதும் வியர்வையில் தோய்ந்திருந்தது சாரத்தின் ஓரத்தினை தூக்கி முகத்தினை அழுத்தமாக துடைத்துக் கொண்டேன்.

பின் எழுந்து குளத்தினை நோக்கிச் சென்றேன். நீர் குளிர்மையற்று சூடாயிருந்தது. கைகளால் நீரை அள்ளியள்ளி வாய்க்குள் விட்டேன். சூடு உடலுக்குள் நேர் கோடாக இறங்குவதை உணர முடிந்தது. வயிறு நிறையும் வரையா மனது நிறையும் வரையா குடித்தேன்?

...நினைக்கவில்லை.

மீண்டும் பற்றையடியில் தோண்டத் தொடங்கினேன். தோண்டி முடிந்ததும் சேட்டினைக்கழட்டி வைத்துவிட்டு ஆசுவாசமாக அமர்ந்து கொண்டேன். இருட்டில் சுற்றிவர இருப்பவையனைத்தும் என்னையே பார்ப்பதான பிரமையில் திடுக்கிட்டு எழுந்தமர்ந்தேன். காற்றின் அருகாமை எனக்குத் தேவையாயிருந்தது. ஆழ மூச்சினை உள்ளிளுத்தேன்.காற்றினை யாரோ கட்டி வைத்து விட்டனர். தவளைகளும் காணாமலே போயிருந்தன.

நான் என்னை மெதுவாக அந்தக் கிடங்கினுள் வைத்து அழுத்தினேன். சாதாரணமான ஒரு பொருளை வைத்து மூடுவது போன்று மிக இலகுவாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை. மண்ணில் மறைந்திருந்து வேடிக்கை பார்த்த வேர் முனைகள் என்னை இறுக்கமாகப் பற்றிக் கொண்டன. என் மூச்சுக்காற்று ஒரு கணம் பதறித் துடித்தது. நான் கிடங்கினை மூடிவிட்டு எழுந்துகொண்டேன்.

நினைவின் அடுக்குகளில் வெடிக்குமந்த உண்மையின் கனவாகவே இதுவும் எனக்குள் சேகரமாகிக் கொண்டிருந்தது. இப்பொழுது காற்று வெடித்துச் சிதறுகின்ற பொழுதுகளை நான் கலக்கமற்று கடந்து கொண்டிருக்கிறேன். காற்றின் குளுமையையும் உணர முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தி யாரையும் வெட்டவில்லை

**- சு.ப.வீரபாண்டியன்**



கடந்த ஓரிரு மாதங்களாகவே ஒரு 'கத்தி'ச் சண்டை நடைபெற்றது. சண்டையின் முடிவில், சண்டையில் கலந்து கொள்ளாத ஒருவர் கழுத்தில் வெற்றி மாலை விழுந்தது. அத்துடன் படத்துக்கு 'சுபம்' போட்டு முடித்துவிட்டார்கள்! நாம் திரையில் பார்த்த கதை இது.

திரைக்குப் பின்னால் நடந்த முழுக் கதையையும் தெரிந்தவர்கள் சொன்னால் கேட்டு ரசிக்கலாம்.

இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்த 'கத்தி' திரைப்படம், சுபாஷ்கரன் என்னும் ஈழத் தமிழரால் தயாரிக்கப்பட்டது.. அவர் இலங்கை ஜனாதிபதி ராஜபக் ஷவுக்கு நெருக்கமானவர் என்பதால் எதிர்ப்பு எழுந்தது. 'செந்தமிழன்' சீமான்தான்

முதலில் கத்தி எடுத்துக் கொண்டு சண்டைக்கு வருவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர், முருகதாசும், விஜய்யும் தமிழர்கள் என்பதைக் கண்டுபிடித்து(?) தான் சண்டைக்கு வருவதில்லை என்று அறிவித்துவிட்டார்.

சீமான் எதிர்க்கவில்லை என்றால் படம் வெளிவந்துவிடுமா என்ன, இதோ நான் இருக்கிறேன் என்று எழுந்தார் பண்ருட்டி வேல்முருகன்.

அவருடன் தனியரசு, பூவை மூர்த்தி என ஆளும் கட்சி ஆதரவாளர்கள் ஒன்று சேர்ந்து, தமிழ் அமைப்பினர் பலரையும் இணைத்து, 'தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு' என உருவாக்கி, கத்தியை முறித்துப் போட்டுவிட்டுத்தான் ஓய்வோம் என்றார்கள். பெரும் கத்திச் சண்டை நடக்கப் போகிறது, என்ன ஆகுமோ என்று பார்வையாளர்கள் பயந்துகொண்டே படம் பார்த்தார்கள்.

இதில் ஒரு நகைச்சுவைக் காட்சியும் தொடர்ந்து இடம்பெற்றது. ஈழத் தமிழர்களுக்கு எதிரான ராஜபக்ஷவின் ஆதரவாளர் சுபாஷ்கரன் என்பதால் அவர் தயாரிக்கும் படத்தை எதிர்க்கிறோம் என்றனர் நம் நண்பர்கள். ஆனால் ஈழத் தமிழர்களில் மிகப் பெரும்பான்மையினர் சுபாஷ்கரன் மற்றும் அவரது லைக்கா நிறுவனத்தை எதிர்க்கவில்லை. ராஜபக்ஷவுடன் உறவு வைத்திருந்தாலும் லைக்கா நிறுவனம் எங்களுக்கும் உதவியாகத்தான் இருக்கிறது என்கின்றனர் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள்.

உண்மைதான்....அங்கிருந்து வெளிவரும் பல தமிழ் இதழ்களில் லைக்கா நிறுவன விளம்பரத்தை நான் பார்த்துள்ளேன். புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களில் மிகப்பலர் லைக்கா நிறுவனத் தொலைபேசியைத் தான் பயன்படுத்துகிறார்கள். அண்மையில், ஒக்ரோபர் முதல் வாரம் ஜெர்மனியில் நடைபெற்ற ஈழத் தமிழர்களின் கருத்தரங்குக்கு விளம்பரதாரரும் லைக்கா நிறுவனம்தான். கடைச் நேரத்தில் லைக்காவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய திருமாவளவன் இதே நிகழ்ச்சியில் (லைக்காவின் அனுசரணையோடு நடைபெற்ற நிகழ்வில்) கலந்து கொண்டவர்தான்.

தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு எப்படி திடீரென்று தீபாவளிக்கு முதல் இரவு சமாதானம் அடைந்து, படம் வெளி வர இசைந்தது என்பது ஒரு துப்பறியும் கதை போல விறுவிறுப்பானது.

தீபாவளிக்கு முதல் நாள் கூட, கூட்டமைப்பின் தலைவர் பண்ருட்டி வேல்முருகன் காரசாரமாக ஒரு அறிக்கை விட்டார். அதில் சில ரகசியங்களையும் அவர் வெளியிட்டிருந்தார். சுபாஷ்கரன் என்பவர் ராஜபக்ஷ வுக்கு வேண்டியவர் மட்டுமில்லை, லைக்கா நிறுவனத்தின் தாய் நிறுவனமான 'ஹேஷ்டிங்ஸ்' 2007 ஆம் ஆண்டே, ராஜபக்ஷவின் அக்கா மகன் ஹிமல் லீலந்திர என்பவருக்கு விற்கப்பட்டுவிட்டது.

அதனால், லைக்கா நிறுவனமே ராஜபக்ஷவுடையதுதான். இந்த உண்மையை வெளியிட்ட காரணத்தால்தான் சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் வசந்த விக்கிரம துங்க படுகொலை செய்யப்பட்டார் என்கிறார் வேல்முருகன். அது மட்டுமல்லாமல் தமிழர்களாலும், தமிழக அரசினாலும் கடுமையாக எதிர்க்கப்பட்ட பொதுநலவாய மாநாட்டின் பிரதான விளம்பரதாரரே சுபாஷ்கரன் தான் என்பதால், கத்தி படத் தயாரிப்பிலிருந்து லைக்கா நிறுவனம் வெளியேறும்வரை எங்கள் போராட்டம் ஓயாது என்று திட்டவட்டமாக அவர் தன் அறிக்கையில் கூறியிருந்தார். வேல்முருகனின் உறுதி கண்டு நாடே புல்லரித்துப் போயிற்று.

அது மட்டுமின்றி, அந்த அறிக்கையின் இறுதிப் பகுதியில் கத்தி படத்தை எதிர்த்து, எந்த வன்முறைக்கும் இடம் தராமல், அற வழியில் போராட வேண்டும் என்றும் மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். அன்று இரவே, சென்னையின் மையப் பகுதில் உள்ள சத்யம், உட்லண்ட்ஸ் ஆகிய இரண்டு திரையரங்குகளிலும் பெற்றொல் குண்டுகள் வீசப்பட்டன. கண்ணாடிகள் உடைக்கப்பட்டன.



தீபாவளி வெடி என்று நினைத்தோ என்னவோ காவல்துறையினரும் அமைதியாக இருந்துவிட்டனர்.

தாடியை வைத்திருப்பதா, எடுத்து விடுவதா என்ற கவலையில் மூழ்கியிருந்ததால், தமிழக அமைச்சர்களும் கத்திச் சண்டையில் கலந்து கொள்ள வில்லை. இதற்கிடையில், தே.மு.தி.க. அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் (தமிழ்த் திரைப்படத் துறையில் தொடர்புள்ளவர்கள்) வேல்முருகனிடம் அவ்வப்போது பேசிக் கொண்டிருந்ததாகச் சில 'விவரம் இல்லாதவர்கள்' கூறினார்கள். அது ஏதாவது உலக நாடுகள் பிரச்சினை குறித்ததாக இருக்கும், கத்தி பற்றியா அவர்கள் பேசப் போகிறார்கள் என்று பார்வையாளர்கள் எண்ணிக்கொண்டனர்.

ஆனால் திடீரென்று தீபாவளிக்கு முதல்நாள் இரவில் எல்லாம் சுபமாக முடிந்துவிட்டது. படத்தின் 'டைட்டிலில்' லைக்கா நிறுவனம் பெயர் போடுவதில்லை என்று ஒப்பந்தம் ஆகிவிட்டதாம். போராட்டக் குழு தன் போராட்டத்தைக் கைவிட்டு விட்டது. அந்தப் படத்தைத் தயாரித்தது யார் என்று உலகுக்கெல்லாம் தெரியும். அப்படி உலகுக்கு தெரியவைத்ததே கத்தி எதிர்ப்பாளர்கள் தான். ஆனால் அந்த ரகசியத்தை வெளியில் சொல்லக் கூடாது என்று போராட்டக் குழு கேட்டுக் கொள்ள, லைக்காவும் அதனை ஏற்றுக் கொண்டு விட்டது.

வேறென்ன வேண்டும்? அந்தப் படத்தில் வரும் லாபம் எல்லாம் அந்த நிறுவனத்திற்குத்தான் போய்ச் சேரும். அதுபற்றி நமக்குக் கவலை இல்லை. பெயர் போடக் கூடாது என்பதுதான் நமது லட்சியம்.

இதனைச் சாதாரணமாகக் கருதாதீர்கள், இது ஒரு அடையாள வெற்றி என்று தொலைக்காட்சியில் தியாகு சொல்லிவிட்டார். கார்ல் மாக்ஸின் மூலதனத்தையே மொழிபெயர்த்தவர் சொல்லிவிட்ட பிறகு, எதிர்த்துப் பேச நமக்கெல்லாம் என்ன தகுதி இருக்கிறது?

இந்த கட்டத்தில்தான், புரியாத புதிராக ஒரு செய்தி வந்தது. அதுதான் கத்திச் சண்டைப் படத்தின் உச்சகட்டம். நடிகர் விஜய் மாண்புமிகு என்று ஒரு அறிக்கை விட்டார். அம்மாவுக்கும், நடைபெற்ற கத்திச் சண்டைக்கும் என்ன தொடர்பு?

ஏன் அம்மாவுக்கு அவர் நன்றி சொல்கிறார்? எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை என்பார்கள். இது எங்கள் அம்மா குதிருக்குள் இல்லை என்பது போல் இருக்கிறதே என்று தோன்றிற்று.

தோழர் தியாகுவுக்குத் தொலைபேசியில் என் ஐயத்தைக் கேட்டேன். உலகச் செய்திகள் எதைப் பற்றிக் கேட்டாலும் உடனே விடை சொல்லக் கூடிய அவர், 'அவர் ஏன் அம்மாவுக்கு வாழ்த்து சொன்னார் என்று எனக்கும் தெரியவில்லை என்று கூறிவிட்டார் அப்பாவி' தியாகு. சரி போகட்டும்...... எல்லாம் 'நல்லபடியாக' முடிந்து விட்டது. கத்தி கடைசியில் யாரையுமே குத்தவில்லை. எல்லோரும் 'உன்னைக் கண்டு நான் ஆட, என்னைக் கண்டு நீயாட உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி'யைக் கொண்டாடினர்.

இருப்பினும் ஒரே ஒரு எச்சரிக்கையுடன் இந்தக் கட்டுரையை முடிக்க வேண்டியுள்ளது. ராஜபக்ஷ உட்பட யார் வேண்டுமானாலும் படம் எடுக்கலாம், பணம் சம்பாதிக்கலாம். ஆனால் பெயரை மட்டும் போடவே கூடாது. மீறிப் பெயர் போட்டால், 150க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள் மீண்டும் 'அற வழியில்' போராடும். என்னே ஒரு இனப்பற்று. போங்கடா நீங்களும் உங்கள் லைக்கா எதிர்ப்பும்.

**லைக்கா நிறுவனமே ராஜபக்ஷவுடையதுதான். இந்த உண்மையை வெளியிட்ட காரணத்தால்தான் சண்டே லீடர் பத்திரிக்கை ஆசிரியர் வசந்த விக்கிரம துங்க படுகொலை செய்யப்பட்டார் என்கிறார் வேல்முருகன். அது மட்டுமல்லாமல் தமிழர்களாலும், தமிழக அரசினாலும் கடுமையாக எதிர்க்கப் பட்ட பொதுநலவாய மாநாட்டின் பிரதான விளம்பரதாரரே சுபாஷ்கரன் தான் என்பதால், கத்தி படத் தயாரிப்பிலிருந்து லைக்கா நிறுவனம் வெளியேறும்வரை எங்கள் போராட்டம் ஓயாது என்று திட்டவட்டமாக அவர் தன் அறிக்கையில் கூறியிருந்தார். வேல்முருகனின் உறுதி கண்டு நாடே புல்லரித்துப் போயிற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமியும் கலக்ஸியும்

**அத்தியாயம் - 22**

## அறிவியல் தொடர் கதை

(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)

படலை ஜே.கே

எலிதாசன்325க்கு பிரம் கணனி சொல்வது சரியென்றே தோன்றியது. இப்போது சண்டை பிடிக்கும் சமயமும் அல்ல.

"சரி நடந்தது நடந்து போச்சு. உனக்குக் கேள்வி தெரியும் தானே அதையும் சொல்லிடு"

"தெரிஞ்சா சொல்லியிருப்பனே.."

"வட்? என்ன சொல்லுறாய்? என்ன கேள்வி எண்டு தெரியாமலா இவ்வளவு காலமும் விடையைப் புடுங்கிக்கொண்டு இருந்தாய்?"

"எலிதாசன்325 இன் பொறுமை கெட்டுவிட்டது குரலில் தெரிந்தது."

"நான் விடையை நோக்கி தான் பைனரி சேர்ச் செய்தனான். சாத்தியமான அத்தனை சமாந்தர பிரபஞ்சங்களையும் கரும்பொருள்களையும் ஆராய்ந்து அவை எல்லாம் எதை நோக்கி பயணிக்கின்றன .. தேடுகின்றன எண்டதை மட்டும் தான் நான் ஆராய்ஞ்சனான்.. கேள்வியைப் பற்றி பெரிசா கவலைப்படவே இல்லை"

"மொக்குச் சாம்பிராணி. என்ன ஏது என்று கேட்காமேயே தேடத் தொடங்கீட்டாய்.. சரி இப்ப குயிக்கா அந்த கேள்வியைக் கண்டு பிடிச்சு சொல்லுறியா?"

"என்ன விளையாடுறீங்களா? சான்ஸே இல்லை"

"அப்பிடி எண்டால் உன்னால கேள்வியை கண்டுபிடிச்சு சொல்ல முடியாதா?"

"என்ர கப்பாசிட்டிக்கு எத்தினை மில்லியன் ஆண்டுகள் ட்ரை பண்ணினாலும் முடியாது."

"அப்ப என்ன செய்யலாம்?"

"எலிதாசன்325 க்கு மெதுவாக அடிவயிற்றைப் பிசைய தொடங்கியது."

"ஒரு ஐடியா"

"சொல்லு குயிக்"

"கேள்வியைக் கண்டுபிடிக்க கூடிய இன்னொரு கொம்பியூட்டரை நான் டிசைன் பண்ணித் தாறன்.. என்னை விடத் திறமையான.. ட்ரில்லியன் ரைமஸ் பரலல் சேர்ச்சிங் செய்யக்கூடிய ஆச்சரிய டிசைன் தங்களைத் தானே மறு உருவாக்கம் செய்து மியுடேட் பண்ணி ப்ரோசசிங் திறனை அதிகரிக்க கூடிய பல கணனிகளை கொண்ட ஒரு கணனி. அதே புரோகிராமில நீங்க கூட இணைந்து கணனியோடு கணனியாகச் சேர்ந்து தொழிற்படலாம்.."

இதைக் கேட்ட எலிதாசன் 325 யோசனையில் ஆழ்ந்தார். பொது மக்களை வேண்டுமானால் ஏதாவது சொல்லி ஏமாற்றிவிடலாம். கடவுள் தன்னுடைய வேட்டியை துவைத்துக் காயப்போடும் இடம் எது? என்ற கேள்விக்கு பதில் தான் தின்னவேலி என்று சொல்லி அதற்கு நிறைய தத்துவ விளக்கங்கள் கொடுக்கலாம். தின்னவேலியைக் கண்டுபிடித்துவிட்டால், காய்ஞ்ச வேட்டியை எடுத்து கட்டுவதற்கு கடவுள் வரும்சமயம் அவர் காலில் விழுந்து இறவாத வரம் கேட்கலாம் என்று ஒரு வெடியைக் கொழுத்திப்போடலாம். முட்டாள் மக்கள் தம்பாட்டுக்கு தின்னவேலி எங்கே இருக்கிறது என்று தேடி அலைய ஆரம்பித்துவிடுவார்கள். சிலர் தாம் இருக்கும் இடத்துக்கே தின்னவேலி என்று பெயரை வைத்துவிட்டு, ஒரு கொடியைக் கட்டி வேட்டியைக் காயப்போட்டுவிட்டும் காத்துக்கிடக்கலாம். அதை சிலர் இரவோடு இரவாக களவும் எடுக்கலாம். களவெடுத்தவனை கடவுள் என்று நினைத்தும் கொண்டாடலாம். மக்களை எப்படியும் சமாளித்துவிடலாம் என்று எலிதாசன்325 க்கு நம்பிக்கை பிறந்தது. எனவே பிரம் சொன்னபடியே கேட்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

"கேட்க நல்லாத் தான் இருக்கு.. விடையைக் கண்டு பிடிக்க அந்த கணனிக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்"



"அது வந்து .. கிட்டத்தட்ட இருநூற்று பதினாறு மில்லியன் ஆண்டுகள் எடுக்கும்.."

"அவ்வளவு காலமா? திரும்பவுமா? ம்கூம் .. அப்ப நான் உயிரோடவே இருக்கமாட்டேனே?"

"அதுக்கும் ஒரு ஐடியா இருக்கு கணனியை கண்டுபிடிக்கிற அதே சமயம்.. பிரபஞ்சத்தில இருக்கிற சபரி என்ற கிரகத்தில நீ போய் பிறப்பெடு. அந்த கிரகத்தில ஒரு ஸ்பெஷாலிட்டி.. அதை விட்டு வெளியேறும் எந்த சபரி கிரக வாசிக்கும் வயசு ஏறாது. மீண்டும் திரும்பி எப்ப அந்தக் கிரகத்துக்கு வருகிறார்களோ அப்போதே அவர்களின் வயசு கூடத் தொடங்கும். அதால அங்க பிறந்து.. பின்னர் நீ வெளியேறி ரைமுக்கு ரைம் அந்த கணனிக்குள் நுழைந்து அந்த கேள்வியை நோக்கி தேடலாம் .. உன் உயிருக்கு ஆபத்தில்ல. இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

பிரமும் எலிதாசன்325 உம் இருநூற்று பதினாறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பேசிக்கொண்ட கதையை சக்கை விவரித்துக்கொண்டிருக்கையிலேயே கந்தசாமி [illegible]

"அந்தக் கணனி தானா பூமி?"

"சரியாக் கண்டு பிடிச்சாய் கந்தசாமி.."

"கந்தசாமிக்கு மண்டை பூமி போல சுழல ஆரம்பித்தது."

"என்ர கடவுளே இந்த பூமி ஒரு கொம்பியூட்டரா? அதில இந்தக் கருமாந்திரம் பிடிச்சவங்கள் கொம்பியூட்டரை கண்டுபிடிச்சு இந்தா ஆட்டம் ஆடினாங்களே? ஐயகோ." கந்தசாமி படபடப்போடு மேலும் சொன்னார்.

"அப்பிடி எண்டா பூமியில இருந்த ஒவ்வொரு மனிசரும் கொம்பியூட்டரா? அம்மாளாச்சி .. நானும் ஒரு கொம்பியூட்டரா.."

"சொல்லப்போனா அது தான் உண்மை"

"எனக்கும் ஷட்டவுன் .. ஸ்டார்ட் பட்டன் எல்லாம் . இருக்கா?"

"சக்கை இதற்கு பதில் ஒன்றும் சொல்லவில்லை."

"அந்தத் தின்னவேலி தான் யாழ்ப்பாணத்தில இருந்துதே .. அப்பிடீஎண்டா அங்கனக்க தான் கேள்வியும் இருந்திருக்கோணும் .. அப்பனே முருகா .. நான் பக்கத்தில் தானே இருந்திருக்கிறன்.."

"சொல்லப்போனா .. நீயும் மறித்தார்.

"நில்லு. நில்லு. நில்லு .. என்ன சொன்ன .. அப்பிடீண்டா?"

"கந்தசாமியில் கைகள் வெட வெடக்க ஆரம்பித்தன."

"அப்படீண் எண்டா என்ன .. சொல்லு கந்தசாமி"

அந்தக் கடைசி செட் புரோகிராம்களில ஒண்டு கந்தசாமி.. எல்லாமே சரியாப் போயிருந்தால் .. பத்து நிமிஷம் தான்.. அந்த சோமரத்னவோட நீ பேசிக்கொண்டிருந்த ரைம் தான் கிளைமக்ஸ்.. லைவ்வல பார்த்துக்கொண்டிருந்த எங்கள் எல்லோருக்கும் ஒரு ரென்ஷன் இந்த.. கேள்வி கிடைக்கப் போகுது எண்டு நினைக்கிற நேரத்தில தான்.."

"நேரத்தில தான் அந்த அறுந்த மிகிந்தர்கள் வந்து பூமியை அழிச்சிட்டாங்களே.. ச்சிக் .. கொஞ்சம் எண்டால்"

"ஓ?"

"ஆனா நல்ல காலம் .. சமயோசிதமா தூர நோக்கோட உன்னைத் தப்புவிச்சு.. இண்டைக்கு பூமி இல்லாட்டியும்.. அவ்வளவு டேட்டாவையும் உண்ட மூளைக்குள்ள இருந்து ரீட் பண்ணலாம்.. எலிதாசன்325 ஒரு ஜீனியஸ்"

"எண்ட கொப்புறானே . அப்பிடீண்டால் அந்த நாசமறுந்த எலிதாசன் தான்"

"பரவாயில்லையே ..உனக்கும் மூளை வேலை செய்யுது கந்தசாமி! .. சரியா கண்டுபிடிச்சாய் .. காலத்தை வென்றவன் கணித மேதை .. தி கிரேட் சயன்டிஸ்ட்.."

சுவரோரமாய் தூணில் ஒய்யாரமாக சாய்ந்துகொண்டே சுமந்திரன் கந்தசாமியை பார்த்து சிரித்தார். அதே குள்ளநரிச் சிரிப்புடன் ஒரு பஞ்ச் டயலொக் ஒன்று அடித்தார்.

"எலிதாசன்325ம் நானே சுமந்திரனும் நானே!"

***

கிழக்கே சூரியன் மறைந்து மேற்கிலிருந்து மற்ற சூரியன் உதிக்க ஆரம்பித்திருந்தது. இந்த இரண்டுமே சூரியன்களா இல்லை வேறு ஏதாவது சூரியன் இவற்றுக்கு ஒளி கொடுக்கிறதா என்ற சந்தேகம் கடந்த முப்பது நாள்களாக கந்தசாமிக்கு அவ்வப்போது தோன்றியிருந்தாலும் யாரிடம் கேட்பது என்று சிக்கல். சுமந்திரன் வேறு கடும் பிஸியாக இருந்தார். இடையில் மூன்று முறை ஆராய்ச்சி சாலைக்கு போய் வந்தபோதும் பெரிதாக முகம் கொடுத்துப் பேசவில்லை. ஏதோ மெசினோடு பேசுவது போலவே பேசினார்.

(கல்க்குவார் கந்தசாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையின் பின் மீண்டும் டெங்கு

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

தேவதைகளின் வழமையான இயல்புக்கு மாறாக சீறிச் சினந்து அடம் பிடித்துக் கொண்டிருந்தது இந்தத்தேவதை. படுக்கச் சொன்னபோது மாட்டன் என்றாள். காய்ச்சல் பார்க்க வாயைத் திற என்றபோது உதடுகளை இறுக மூடிக் கொண்டாள். தொட்டபோதுதான் காரணம் புரிந்தது. அனலாகக் காய்ந்து கொண்டிருந்தது.

காய்ச்சல் இரண்டு நாள்களாக. சாப்பிடுகிறாள் இல்லை. சினந்து கொண்டிருக்கிறாள். ஓங்காளம் இருக்கிறது. இரவு முழுவதும் நல்ல தூக்கம் இல்லை. டெங்குக் காய்சலாக இருக்குமோ என்ற பயத்தில் வந்திருந்தார்கள்.


இரத்தப் பரிசோதனை. செய்தோம். வைரஸ் காய்ச்சல் தான் என்பது உறுதியாயிற்று. மொத்த வெண்கல எண்ணிக்கை (Full blood countd FBC) குறைவாக இருந்தது. பிளேட்லெட் (Platelet வெண்குருதி சிறுதுணிக்கை) எண்ணிக்கை சரியாக இருந்தாலும் சாதாரண அளவின் கீழ் மட்டத்தில் இருந்தது. இது எல்லா வைரஸ் காய்ச்சலுகளுக்கும் பொதுவானதுதான்.

ஆயினும் அவளது கடுமையான காய்ச்சலும், உடல் மற்றும கண் வலிகளும் இது டெங்கு வாக இருக்கும் என்ற சந்தேகத் தையே எழுப்பியது. எனவே உறுதி செய்வதற்காக இரத்தப் பரிசோதனை செய்வதற்கு மறுநாளும் வரச்சொன்னோம்.

இரண்டாம் நாள் பார்த்தபோது காய்ச்சல் சற்று குறைந்திருந்தது. உடல் வலிகளும் குறைந்து குழந்தை அமைதியாக இருந்தாள். ஆயினும் இரத்தப் பரிசோதனையில் பிளேட்லெட் (Platelet) எண்ணிக்கை மேலும் குறைந்திருந்தது. ஆயினும் ஆபத்தான எண்ணிக்கை எல்லையை எட்டவில்லை.

இருந்தபோதும் ஆபத்து எல்லையை அவள் இன்னமும் தாண்டவில்லை.

மூன்றாம் நாளும் அந்தச் சின்ன அழகிக்கு இரத்தம் குத்தி எடுத்துப் பரிசோதனை செய்து வேதனைப்படுத்த மனம் விரும்பாத போதும் வேறு தேர்வு இருக்கவில்லை. மூன்றாம் நாள் அவள் வரும்போது அவளுக்கு காய்ச்சல் ஆரம்பித்து 5 நாள்கள் ஆகிவிட்டது. மான்குட்டி போல துள்ளிக் குதித்து வந்தாள். காலையில் வழமைபோலச் சாப்பிட்டாள். விளையாடுகிறாள் என்று தகப்பன் கூறினார்.




### சாதாரண டெங்கு காய்ச்சல்

இருந்தபோதும் அவள் உள்ளங்கைகளைக் கசக்கிக் கொண்டிருந்தது என் கண்களில் பட்டது. ஒரு சிலரில் டெங்கு குணமாகி வரும்போது இத்தகைய உள்ளங்கை நமைச்சல் எடுப்பது பற்றி அண்மையமருத்துவ சஞ்சிகைகளில் தகவல் வந்திருந்தமை நினைவில் வந்து மனதை அல்லற்படுத்தியது.

மீண்டும் இரத்தப் பரிசோதனையை தவிர்க்க முடியாது செய்தோம். இந்த முறை மூன்று பரிசோதனைகள்.

முன்பு இருதடவைகள் செய்த அதே முழு இரத்த எண்ணிக்கையுடன். ஈரல் செயற்பாட்டுக்கான பரிசோதனைகள் (SGPT,SGOT). மற்றும் டெங்கு அன்ரிபொடி டெஸ்ட் (Dengue Antibody) ஆகியவையும் செய்தோம்.

முதல் இரண்டு பரிசோதனைகளிலும் எந்த வித்தியாசமும் இல்லை. அவள் ஆரோக்கியமாக இருப்பதைக் காட்டின. ஆயினும் டெங்கு அன்ரிபொடி டெஸ்ட் பொஸிடிவ் ஆக இருந்தது. அதாவது அவளுக்கு வந்தது டெங்குக் காய்ச்சல்தான் என்பது உறுதியாகிறது. ஆயினும் இது சாதாரண டெங்குக் காய்ச்சல்தான்.

முடிவைக் கூறியதும் தந்தை பரபரத்தார். விளக்கம் அளித்தேன்.

சாதாரண டெங்குக் காய்ச்சலானது சாதாரண வைரஸ் காய்ச்சல் போல எந்தப் பிரச்சினையும் இன்றி தானாகவே மாறிவிடும். 50 சதவிகிதமானவர்களுக்கு இப்படித்தான் நடக்கும். எந்தவித சிகிச்சைகளும்தேவைப்படாது. மிகுதியில் 40 சதவிகிதமானவர்களுக்கு டெங்குக் காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் வெளிப்படும். இது சாதாரண சிகிச்சைகளுடன் குணமாகும். இந்தப் பிள்ளைக்கும் அவ்வாறே குணமாகிவிட்டது.

### டெங்கு குருதிப் பெருக்கு காய்ச்சல்

மற்றொருவர் இளம்தாரி. நான்கு நாள்களாகக் காய்ச்சல். வேறு மருத்துவம் செய்தும் குணமாகாததால் என்னிடம் வந்திருந்தார். தலைச் சுற்று, நிலை குலைவு ஏதும் இல்லை என்றார். எனக்கு ஒன்றும் இல்லை இவர்கள் நட்டுப் பிடித்து கொண்டு வந்தார்கள் என்றார். பரிசோதித்ததில் சூடு 100 அளவில் காய்ந்தது. ஈரல் வீங்கியிருக்கவில்லை. இரத்த அழுத்தம் நாடித் துடிப்பு எல்லாம் நன்றாக இருந்தது.

பொதுவாக உடல்நிலை நன்றாக இருந்தது. ஆயினும் சரும நிறம் சந்தேகம் அளிப்பதாக இருந்தது.

உடனடியாக இரத்தப் பரிசோதனைகள் செய்தபோதும் திடமான முடிவுகளைக் கொடுக்கவில்லை.

மறுநாள் மீண்டும் பரிசோதித்தபோது குருதியில் சடுதியான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. மூக்கால் சற்று இரத்தம் வந்ததாகவும் சொன்னார். டெங்கு குருப் பெருக்கு காய்ச்சல் என்பது நிரூபணமானது. உடனடியாக அனுமதித்தோம்.

அடுத்த வாரம் வேறு ஒருவரை இதே நபர் கூட்டி வந்திருந்தார். சரியான நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு போனதால் எனக்குப் பிரச்சினை ஏற்படவில்லை என்றார் தப்பிவிட்ட மகிழ்ச்சியில். கண்களில் இரத்தக் கசிவு, மூக்கால் இரத்தம் வடிதல், வாந்தியுடன் இரத்தம் போன்ற பயங்கரமான அறிகுறிகள் இருந்தாலும் இவர்களில் 98 சதவிகிதமானவர் கள் ஆபத்தான கட்டத்தை அடைய மார்ட்டார்கள். தப்பிவிடுவார்கள். ஒரு சிலர் மட்டும் அடுத்த நிலைக்குப் போகக் கூடும்.

### டெங்கு அதிர்ச்சி நிலை

மிக ஆபத்தானது டெங்கு அதிர்ச்சி நிலை ஆகும். இவர்கள் மிகக் குறைந்த 2 சதவிகிதத்தினருக்கு மட்டுமே இது வரும். இந்த 2 சதவிகிதமானவர்களை ஆரம்ப நிலையிலேயே இனங்காண்பதிலும் அவர்களுக்கு மருத்துவ மனையில் வைத்து மிகக் கவனமான முறையில் சிகிச்சை அளிப் பதன் மூலமே ஆபத்தான டெங்கு நோயாளிகளைக் காப்பாற்றவும் இறப்பு விகி தத்தைக் குறைக்கவும் முடியும்.

ஆயினும் இது மருத்து மனைகளிலேயே முடியும். டெங்கு அதிர்ச்சி நிலைக்கான நவீன சிகிச்சையில் உட லின் திரவ நிலையை சரியான அளவில் பேணுவதே முக்கியமானது. வெளியேறும் சிறுநீரின் அளவைக் கண்காணித்து அதற்கேற்பவே நீராகாரம் முதல் நாளம் ஊடான திரவம் கொடுப்பது வரை கொடுப்பார்கள்.

**சாதாரண டெங்குக் காய்ச்சலானது சாதாரண வைரஸ் காய்ச்சல் போல எந்தப் பிரச்சினையும் இன்றி தானாகவே மாறிவிடும். 50 சதவிகித மானவர்களுக்கு இப்படித்தான் நடக்கும். எந்தவித சிகிச்சைகளும் தேவைப் படாது. மிகுதியில் 40 சதவிகிதமானவர் களுக்கு டெங்குக் காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் வெளிப்படும். இது சாதாரண சிகிச்சைகளுடன் குண மாகும்.**

இந்த அதிர்ச்சி நிலையானது காய்ச்சல் தணியும் நிலை யிலேயே வெளி வரும். எனவே காய்ச்சல் தணிந்த போதும் நோயாளியின் பொதுவான உடல் நிலை திருப்தியாக இல்லாவிடின் மருத்துவரைக் காண வேண்டும்.

கடுமையான களைப்பு, இயங்க முடியாமை, சினப்படுதல், அமைதியின்மை, கடுமையான வயிற்று வலி, வாந்தி, கடுமை யான சோர்வு, உள்ளங்கால் உள்ளங்கை போன்றவை குளிர்ந்து ஈரலிப்பாக இருத் தல், சிறுநீர் மிகக் குறைவாக வெளியேறல் போன்ற அறிகுறி கள் காய்ச்சல் தணிந்த பின்னரும் இருந்தால் அது ஆபத்தாக லாம்.

மேலே கூறிய உதாரணங்களைக் கொண்டு டெங்கு காய்ச்சலின் மூன்று பிரிவுகளையும் புரிந்து கொள்ள முடியும்.

### பீதிக் காய்ச்சல்

கைகால் உளையுது மேல் நோகுது. துலையிடிக்குது தும்முது என மிகுந்த ஆர்ப்பாட்டத்தோடு வந்தார்.

மூன்றாமவர் மனைவியுடன். நான் வேலை செய்யிற இடத்திலை இரண்டு பேருக்கு டெங்கு வந்தது.

எனக்கும் டெங்குவோ எனப் பயந்தார். கடுமையான காய்ச்சல் இல்லை. உடல் மற்றும் இரத்தப் பரிசோதனைகளும் சரியாக இருந்தது. இரண்டு நாள் பொறுத்து மீண்டும் இரத்தப் பரிசோதனை செய்வோம் என்றேன்.

இல்லை பயமாக்கிடக்கு. நான் வாட்டிலை நிக்கப் போறன் என்று சொன்னார். மறுநாள் காலை மீண்டும் வந்தார். ஆஸ்பத்திரியிலை நிப்பாட்ட மாட்டன் என்றிட்டாங்கள். வாட்டிலை சரியான சனமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இரண்டு நாள்கள் பரிசோதித்துப் பார்த்தும் அவருக்கு எதுவும் இல்லை. இவருக்கு டெங்கு வரவேயில்லை. வெறும் பீதிக் காய்ச்சல் தான்.

### நீங்கள் செய்யக் கூடியவை எவை?

சாதாரண காய்ச்சல்கள் தடிமன், மூக்கடைப்பு, தும்மல் தலையிடி, தொண்டை வலி, சலக்கடுப்பு,

வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகளுடன் வரும். வந்த உடனேயே மருத்துவரிம் ஓட வேண்டியதில்லை. ஓரிரு நாள்கள் பரசிற்றமோலை அளவுடன் கொடுத்துப் பாரக்கலாம்.

ஆனால் டெங்கு காய்ச்சலானது ஆரம்பத்திலேயே மிகக் கடுமையாக இருக்கும். 104 105 எனக் கடுமையாக இருக்கும். பொறுக்க முடியாத உடல் மற்றும் மூட்டு வலிகள் இருக்கும். கண்ணுக்குப் பின் குத்துவது போன்ற தலையிடியும் இருக்கும். வயிற்று வலி வாந்தி பின்னர் வரக் கூடும். மேற் கூறிய கடுமையான அறிகுறிகள் இருந்தால் மருத்துவரைக் காணுங்கள்.

காய்ச்சல் மற்றும் உடல் வலியைத் தணிக்க பரசிற்றமோல் மாத்திரையை வயதுக்கு ஏற்ற அளவில் கொடுங்கள். 6 மணி நேரத்திற்கு ஒரு தடவையே கொடுங்கள். அதற்கு மேலாக அளவைக் கூட்டிக் கொடுக்கக் கூடாது. அளவுக்கு மீறிய பரசிற்றமோல் ஈரலைப் பாதிக்கும்.

பரசிற்றமோல் மருந்தைச் சரியான அளவில் கொடுத்தும் காய்ச்சல் தணியவில்லை எனில் மீண்டும் இரத்தப் பரிசோதனை செய்வது உதவக் கூடும். ஆனால் இப் பரிசோதனையானது காய்ச்சல் ஆரமபித்த முதல் 24 மணிநேரத்துக்குள் மட்டுமே சரியான முடிவைக் கொடுக்கும் என்பதால் பெரும்பாலும் உதவுவதில்லை.

புரூபன், பொன்ஸ்டன் போன்றவற்றைக் கொடுக்கவே கூடாது. காய்ச்சல் கடுமையாக இருந்தால் இளம் சூட்டு நீரால் ஸ்பொன்ஞ் பண்ணுவது குழந்தைக்கு இதமாக இருக்கும்.

ஓய்வு மிக முக்கியமானது. பரீட்சை வருகிறது, நடனப் பயிற்சி, வெளியூர்ப் பயணம் என்றெல்லாம் சொல்லி கடுமையான மருந்துகளைக் கொடுத்து வேலைக்கோ பாடசாலைக்கோ அனுப்ப முயற்சிக்க வேண்டாம்.

போதிய நீராகாரம் கொடுக்க வேண்டும். ஆனால் தேவைக்கு அதிகமாக லீற்றர் கணக்கில் கொடுப்பதும் கூடாது.

சிறுநீர் வழமைபோலப் போகிறதா என்பதை அவதானிக்க வேண்டும். மிகக் குறைவாக வெளியேறுவதுடன் கடுமையான தாகம் இருந்தால் அதை மருத்துவருக்கு உடனடியாகத் தெரியப்படுத்துங்கள்.

மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் FBC இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டியிருக்கும்.

முதல் நாளிலிலேயே செய்ய வேண்டியது ஏன், எப்போது என்பது பற்றி ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். அதன் பின்னர் தேவை ஏற்படுமாயின் தினமும் ஒரு தடவையோ இரு தடவைகளோ செய்ய வேண்டி நேரலாம்.

டெங்கு ஏற்படுத்தும் வைரஸ் கிருமியானது நோயாளியின் உடலில் சுமார் 5 நாள்களுக்கு இருக்கும்.

ஆனால் கடுமையான தாக்கம் 4ஆவது அல்லது 5ஆவது நாளிலேயே உச்ச நிலையில இருப்பதால் அந்த நேரத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டும். அந்தநேரத்தில் நோயாளியின் இரத்தக் குழாய்கள் பாதிப்புற்று இரத்தம் அல்லது இரத்தப் பாயம் (plasma) குழாய்களை விட்டு வெளியேறுவதாலேயே டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படுகிறது.

சிவத்த நிறமுடைய பானங்களையோ உணவுகளையோ கொடுப்பதைத் தவிருங்கள்.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் அதாவது இந்த ஜூன் வரை சுமார் 14,152 பேர் டெங்கு எனச் சந்தேகிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் 59 சதவிகிதமானவர்கள் சனநெருக்கடி மிக்க மேல் மாகாணத்திலேயே இனங் காணப்பட்டுள்ளனர்.

எமது வீட்டை, எமது சுற்றுச் சூழலை, எமது பாடசாலைகளை, எமது தொழிலகங்களை நுளம்பு இல்லாத இடங்களாக மாற்றுவதால்தான் டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுக்க முடியும். இதில் ஒவ்வொரு குடிமகனதும் பங்களிப்பு அவசியம் என்பதை மறக்க வேண்டாம். அதில் நீங்களும் நானும் ஒவ்வொருவரும் அடங்குகிறோம்.

அவ்வாறு நுளம்பு பெருகுவதைத் தடுத்தால் டெங்கு தனது கோர முகத்தைக் காட்ட முடியாது முடங்கி அடங்கிவிடும். அவதானமாக இருங்கள்

LG
Life's Good

மின் தடையானாலும்
குளிர்ச்சியாய்

மின் தடையானாலும்
எவர்கூல்

மின் தடைப்பட்டாலும் குளிர்ச்சியை தரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள LG பவர்கட் எவர்கூல் குளிரூட்டி



மின் தடையேற்பட்டாலும்
7
மணித்தியாலங்கள்
தடையின்றி குளிர்ச்சியாய்
வைத்திருக்கும்

வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு
ரூ.52,900

2376000
நாடெங்கிலும் உள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெறலாம்.
Abans

மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள்
வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!

ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில்
பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன்
இணைந்து மேலும் பணம்
சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.
அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!
நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து ...
சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539
மின்னஞ்சல்: banksup@cbsl.lk



1st time in Sri Lanka

செறிப்பான அவுஸ்திரேலிய பேஷியல் வகைகளால் உங்களை தனித்துவமாக்கிடுங்கள்...

அறிமுகம் சுகல புதிய வைட்னிங் டே கிறீம்

6 in 1

Gold jojoba
Facial Face Treatment

Alaris

Alaris Lanka (Pvt) Limited.
0773 540 878
No 9/3, Horana Road, Kesbewa, Piliyandala. www.alaris.lk

யார் என்ன சொன்னாலும், அதிக தொகை தருவது நாங்களே!



24 கரட்டுக்கு
ரூ. 42,000/-*

22 கரட்டுக்கு
ரூ. 36,000/-*



ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுடனும் பெறுமதியான அன்பளிப்பு

எல் பீ பினான்ஸ், தங்க நகைகளுக்கு உயர் மதிப்பு

* முன்னறிவித்தல் இல்லாமல் நகைகளை மீட்கலாம். * வாரத்தின் 7 நாட்களும் பி.ப. 6.00 வரை திறந்திருக்கும். * தங்க நகைகளுக்குப் பூரண காப்புறுதி.

கெனிஸ்டன் 0777 716 986
சுரேஸ் குமார் 0773 384 981
மோகன்ராஜ் 0778 065 387

L B FINANCE
எல்.பீ. பினான்ஸ் பி.எல்.சி.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
T: 0114 521 000 www.lbfinance.com

L B FINANCE GOLD LOANS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஒக்ரோபர் 29ஆம் திகதி வெளியி...